# மட்டுநகர்
# ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார்
# ஆலய வரலாறு



தொகுத்தவர் :

த. நாகையா ஆசிரியர்.



# மட்டுநகர்
# ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார்
# ஆலய வரலாறு

தொகுத்தவர்

**த. நாகையா ஆசிரியர்**

கோட்டைமுனை,
மட்டக்களப்பு.

## பதிப்புத் தரவுகள்

நூற்பெயர் : மட்டுநகர் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆயல வரலாறு.

வகை : இந்து சமய ஆலய வரலாறு.

தொகுத்தவர் : த. நாகையா (ஆசிரியர்).

வெளியீடு : ஆடித்திங்கள் 1996.

பதிப்புரிமை : தொகுப்பாசிரியருக்கு.

அச்சகம் : புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.

பிரதிகள் : 1000.

# முன்னுரை

கடல்சூழ் ஈழமணித் திருநாட்டின் கிழக்கே ஆழிக் கரையோரம் அமைந்திருப்பது அமிர்தகழிக்கணித்தாய் மாமாங்கத் திருப்பதியாகும். இங்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற திவ்விய சேத்திரமாக ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாராலயம் விளங்குகின்றது. இங்கு பிணிதீர்க்கும் பாவநாசத் தீர்த்தமாக மாமாங்கத் தீர்த்தம் அமைந்துள்ளது.

பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயம் பற்றிய திருத்தல வரலாறு கூறும் சரியான நூலொன்று இதுவரை வெளியிடப்படாமை பெருங்குறையாகும்.

இக்குறைபாட்டினை நிவர்த்திசெய்யும் பொருட்டு திரு. த. நாகையா ஆசிரியரவர்கள் இத்தொகுப்பு நூலைச் சிறப்பாக ஆக்கி அளித்துள்ளார். வரவேற்கத்தக்க நல்லதொரு முயற்சியாகும். எல்லோரினதும் பாராட்டுக்கும், நன்றியறிதலுக்கும் உரித்துடையவராவர்.

பண்டைய வரலாற்று ஏட்டுச் சுவடிகள் மற்றும் ஆராய்ச்சி அனுபவம் ஆகியவற்றின் துணைகொண்டு இவ்வாலயத்தின் முழு வரலாற்றினையும், பெருமையினையும் சகலரும் புரிந்துகொள்ளும் வண்ணம் இந்நூலில் எழிய நடைமுறையில் விளக்கப்பட்டுள்ளது.

ஆலயச் சிறப்புக்கள், மூர்த்தியின் கீர்த்திகள் என்பனவற்றை வரலாற்றுரீதியாகவும், அனு ரீதியாகவும் விளக்கும் இந்நூல் மெய்யடியார்களுக்கு மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையுமென்பதில் ஐயமில்லை. மிகவும் பயனுள்ள தகவல்களையுமுள்ளடக்கியுள்ள இந்நூல் சைவமக்களால் காலந்தோறும் பாதுகாத்து வைக்கப்படவேண்டிய ஒரு பொக்கிஷமாகும். இத்திருப்பணியில் பங்குகொண்ட சகலருக்கும் ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமானின் அருளை வேண்டிநிற்கின்றேன்.

**இ. கணபதிப்பிள்ளை**
ஆலயக் கணக்காய்வாளர்,
மட்/அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையாராலயம்,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

# ஆசியுரை

மாமாங்கப்பிள்ளையார் தேவஸ்த்தானம்

வேதாகம மாமணி

## இ. பூரணானந்தக் குருக்கள்

### எழுதியது

---

## விரிகடல் உலகின் விளைவேபோற்றி

சரித்திரப் பிரசித்திபெற்றதும், முன்னோர்களால் போற்றிப் பாடப்பெற்றதும், மூர்த்தி – தீர்த்தம் – ஸ்தல விசேஷம் என்னும் மூவகையான சீர் சிறப்புக்களைப் பெற்றதும், சகல இன மக்களினாலும் வேண்டித் துதிக்கப் படுபவருமான மட்டுநகர் மாமாங்கப்பிள்ளையார் திருத் தல வரலாற்றை மேற்படி ஆலயத்தில் பல காலமாக வண்ணக்கர் அவர்களாகக் கடமைபுரியும் அருள் - திரு. தம்பிமுத்து நாகையா ஆசிரியர் அவர்கள் புஸ்த்தக ரூப மாக வெளியிடுகிறார். வண்ணக்கர் அவர்களின் நெடுங் கால நினைவு ஈடேறியது.

சகல இந்துப் பெருமக்களும் இந்நூலை வீட்டில் வேண்டிவைத்துப் பயனடைய கடமைப்பட்டவர்களாவார் கள்.

திரு. நாகையா ஆசிரியர் அவர்கள் பலகாலமாக மாமாங்கப்பிள்ளையார் ஆலய வண்ணக்கராக - தொண்டு புரியவும், சுகமான வாழ்வைப்பெற்று நீடுவாழ சர்வேஸ் வரன் பாத கமலங்களை வேண்டி அன்புடன் ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

இங்ஙனம்

வேதாகம மாமணி

இ. பூரணானந்தக் குருக்கள்,

— ஆரா அமுதே அருளேபோற்றி —

# அணிந்துரை

கிழக்கிழங்கையில் மட் / அமிர்தகழி என்னும் கிராமத்தில் மாமாங்கப் பதியில் கோயில்கொண்டெழுந்தருளி இருக்கும் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயமானது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அம்சங்களும் ஒருங்கமையப்பெற்றதும் புராதன புராண இதிகாச வரலாற்றுப் புகழ்மிக்கதுமாகும்.

இவ்வாலயம்பற்றிய வரலாறுகள் இதுவரை எவராலும் எழுதப்பட்டதாக இல்லை. இது பெரும் குறையாகக் கருதப்படுகின்றது. இதை நிறைவுசெய்துள்ளார் இளைப்பாறிய ஆசிரியர் திரு. நாகையா அவர்கள். இவர் கோட்டைமுனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஸ்ரீ மாமாங்பிள்ளையார் ஆலயத்தில் அதிககாலமாக ஈடுபாடு கொண்டவர். இவ்வாலய முன்னேற்றத்தில் ஊக்கத்துடனும், அக்கறையுடனும் செயல்படும் வண்ணக்கர்களில் ஒருவருமாவார். இவர் தொண்டு பாராட்டப்படவேண்டியது.

ஆலயம் அமைந்துள்ள கிராமம், அயற்கிராமங்களின் முன்னைய வரலாறுகளையும் மண்வாசனையுடன் வெளிக்கொணர்ந்துள்ளார். கர்ணபரம்பரைக் கதைகள், இதிகாசப் புராணக் கதைகள், பரம்பரையாக வழங்கிவந்த செவிவழிக் கதைகளையும் பலரிடமும் கேட்டுச் சேர்த்துள்ளார்.

ஆலயச் சிறப்புக்கள், வருடாந்த உற்சவம், தீர்த்தச் சிறப்புக்கள்பற்றியும் விளக்கியுள்ளார்.

ஆடக சவுந்தரி என்ற அரசி புனிதமும் புதுமையும் நிறைந்த மாமாங்கத் தீர்த்தக்குளத்தில் நீராடி ஜென்ம வினைகள் நீங்கப்பெற்ற சம்பவங்களையும் சிறப்பாகக் காட்டியுள்ளார். இராமபிரான் இராவணனுடன் யுத்தஞ் செய்து சீதையைச் சிறைமீட்டு வரும்போது சிவலிங்க வழிபாடு செய்வதன்பொருட்டு ஏற்படுத்திய சிவலிங்கமே மாமாங்கப்பதியில் உள்ளது என்றும், அவர் தன்னுடைய கோதண்டத்தை ஊண்டி பதித்து நீர் பெற்ற இடமே மாமாங்கத் தீர்த்தக்குளம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயமும், தீர்த்தக் குளமும் பிதுர்க்கடன்களைச் செய்யச் சிறந்த தலமாகவும், தீர்த்தமுமாகவும் மதிக்கப்படுகின்றது. ஆடி அமாவாசை தினத்தில் இவ்வாலயத்தில் பிதுர்க்கடன் செய்தல் மிக்க பலன் தரும். கிழக்கிலங்கையின் பல திக்குகளிலுமிருந்து ஏராளமான மக்கள் இங்குவந்து தீர்த்தமாடிச் செல்கின்றனர்.

இந்நூல் மட்டக்களப்பு வாழ் சைவப் பெருமக்களுக்கு மிக்க பயன் உள்ளதாகும். இந்நூலைப் பெற்றுப் படித்து மாமாங்கப்பிள்ளையாரின் அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

த. சினித்தம்பி,
ஆலய வண்ணக்கர்,
மட்/ மாமாங்கப்பிள்ளையார் ஆலயம்,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.



# எனது உரை

ஈழவள நாட்டில் சிறந்து விளங்கும் சைவப் பெருமக்களின் புண்ணிய தலங்களில் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையாராலயமும் ஒன்று. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய அம்சங்கள் முறையாக அமைந்தது.

ஈஸ்பரம் என்ற பெயரையும், பிள்ளையாரென்ற பெயரையும் கொண்டுள்ள இவ்வாலயம் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஒரு பழம்பெரும் பதியாகும்.

ஆரம்பகாலத்தில் இக்கோயிலை ஆதரித்துவந்த மெய்யடியாரொருவருக்குக் கனவில் மாமாங்கேஸ்வரப் பெருமான் தோன்றி மேற்படி மாசிமகத்தன்று தன்னை மாமாங்கப்பிள்ளையாராக ஆதரிக்கும்படி கட்டளையிட்டருளினான் எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் தந்தை ஈஸ்பரனும், மைந்தன் விநாயகனும் ஒன்றாயமர்ந்திருந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

இவ்வாலயத்தைத் தரிசிப்பவர்களுக்கும், திருப்பணிகளைச் செய்பவர்களுக்கும் கேட்கும் வரங்கள் இரட்டிப்பாகும். நாள்தோறும் இவ்வாலயத்தை வழிபட்டுப் பயன்பெற்றோரும், பெறுகின்றவர்களும் பெருமானின் பெருமைகளை அறிகின்றனர்.

காத்தல் கடவுள் மகாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ இராமபிரானால் உருவாக்கி வழிபாடு செய்யப்பட்டது இலிங்கம் அவரது கோதண்டத்தை ஊண்டிப் பதித்து நீர் பெற்ற குழியே தீர்த்தக்குளம். இவை புனிதமும் புதுமைகளுமுடையன.

இலிங்கம் பெயர்த்தெடுக்கமுடியாத சுயம்பு இலிங்கமாகும். இந்த இலிங்கமே ஆலய கர்ப்பக்கிரகத்தில் அமைந்துள்ளது. இதை இன்றும் ஆலயத்தில் நேரில் காணலாம்.

கிழக்கிழங்கையில் உள்ள பல புராதன ஆலயங்களிருந்தும் சிலவற்றுக்கே வரலாறுகள் உண்டு. இவ்வாலயத்துக்கும் இதுவரை ஒரு வரலாற்று நூல் இல்லாதது பெங்குறையாகும். முன்னோர் தெளிவாக அறிந்துகொள்வதற்கான ஆதாரங்களை இட்டுச்செல்லவும் இல்லை.

இறைவன் திருக்குறிப்பாலன்றித் தல வரலாறுகள் தோன்றுவதில்லை என்பதை நினைவூட்டும் வகையில் இந்நூல் ஆலய வரலாற்றினுக்கு வித்திடுகின்றது.

முன்னோர் செய்த தவறினை நாமும் நமது பிற்சந்ததியாருக்குச் செய்யாதிருக்கவேண்டும். இவ்வெண்ணம் மனதில் எழுந்தகாலை பல நாட்களாகத் தேடிப்பெற்ற நூல்களையும், வரலாறுகளையும் கொண்டு இத்தொகுப்புநூல் இடம்பெற்றுள்ளது. இந்நூலைத் தொகுக்கப் பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய வண்ணக்கர் திரு. சீனித்தம்பி அவர்களுக்கு நன்றியும் கடமைப்பாடும் உடையேன்.

மெய்யடியார்கள் விரும்பிப் பெற்று, படித்து ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாரின் அருளைப் பெறுமாறு வேண்டுகின்றேன்.

த. நாகையா ஆசிரியர்,
கோட்டைமுனை,
மட்டக்களப்பு.

## நன்றிக்குரியவர்கள்

1. வாழ்த்துரை தந்து ஆசிவழங்கியவர், 
வேதாகம மாமணி இ. பூரணானந்தக் குருக்கள்.

2. மகோற்சவ விளக்கங்களைத் தந்துதவியவர், 
பிரம்மஸ்ரீ பூரண சந்திரானந்த சிவாச்சாரியார்.

3. முன்னுரை எழுதி முகவுரை தந்தவர், 
திரு. இ. கணபதிப்பிள்ளை (ஆலயக் கணக்காய்வாளர்).

4. அணிந்துரை தந்து ஆற்றுப்படுத்தியவர், 
திரு. த. சீனித்தம்பி (ஆலய வண்ணக்கர்).

5. மட்/கோட்டைமுனைப்பகுதி வேழாளர் பரம்பரையினர், 
திரு. நெ. சிறிஸ்கந்தராசா (ஆலய வண்ணக்கர்).

6. குறுகிய நாளில் நிறைவுடன் சிறப்பாய் அச்சுச்செய்த 
புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தினர்.



## விநாயகர் வணக்கம்

வேதத்தின் வித்தாய் விண்ணவர்க்குத் தெய்வமாய்
தீதற்ற நெஞ்சத் திருவிளக்காய் - மாதவத்தின்
அருளாய் ஒளிர்கின்ற ஐயா விநாயகனைப்
புருவ நடுநிறுத்திப் போற்று.

## எமது உரை வேண்டுதல்

ஒரு கொம்பு இரண்டு செவி மூன்று மதம் நால்வாய்
பொரு செங்கை ஐந்துடைய புத்தேன் - வருகெங்கை
ஆறு தரித்தோன் மைந்தன் ஆனை முகத்தோனே
இத்தொகுப்புக்கு என்றும் நீ காப்பு.

## வணக்கம்

சீர்கொண்ட கரிமுக முமைந்து கையும்
சிறந்த ஆபரணமுடன் ஒற்றைக் கொம்பும்
ஏர் கொண்டவிமலர் கடங்கலியைத் தீர்த்து
எழில் குகற்கு முன்பிறந்து அமரர்மெச்ச
பேர்கொண்ட பிரணவமாய் பிரணவத்துள்
பெருமை சிவலிங்கமென வந்தமூலம்
கார்கொண்ட அண்டபிண்ட மெங்குந்தானாய்
காத்திடும் கணபதியை வணங்குவோமே.

# பொருளடக்கம்

01. மட்டக்களப்பு மாநிலம்:
02. மட்டு மாநகர்
03. கோட்டைமுனை
04. அமிர்தகழிக் கிராமம்
05. மாமாங்கம்
06. மாமாங்கக்குளம்
07. மாமாங்கக்குளச் சிறப்பு
08. ஆலயச்சூழல்
09. ஆலயம் அமைந்த வரலாறு
10. இலிங்கம் பற்றிய வரலாறு
11. ஆலய அமைப்பு
12. இறை சக்தி
13. சிவமும் விநாயகரும்
14. மாசிமகம், மகாமகம்
15. கும்பகோணம்
16. தீர்த்தங்கள் பொது
17. ஸ்ரீ இராமபிரானும் பிரமகத்தி தோஷமும்
18. மஹாயன பட்சம்
19. ஆடி அமாவாசை
20. வருடாந்த மகோற்சவம்
21. மகோற்சவ விளக்கம்
22. ஆலய விசேச பூசைகள்
23. ஆடக சவுந்தரியின் வரலாறுகள்
24. இவ்வாலயத்தில் நிகழ்ந்துள்ள அற்புதங்கள்
25. ஆலய நிர்வாகம்
26. மடங்கள் ஆலய மடங்கள்
27. இராஜ கோபுரம் அமைத்தல்.

உ

ஓம் சிவம் மாமாங்க ஈசுவரா துணை



# மட்டுநகர் மாமாங்கப் பிள்ளையார் ஆலய வரலாறு

## மட்டக்களப்பு மானிலம்:

ஈழவள நாட்டின் கிழக்குத் திசையில் வங்கக் கடலோரம் இம்மானிலம் உள்ளது. நிலப்பரப்பு 135 மைல்வரை நீண்டும் ஒடுங்கி 50 மைல் தூரம்வரை வரந்தும், வடக்கே குமுக்கன் ஆற்றையும், தெற்கே வெருகல் கங்கையினையும் எல்லைகளாகக்கொண்டது.

மட்டக்களப்பு என்பது தனித் தமிழ்ச்சொல் (மட்டம்+களப்பு) மட்டமான களப்புக்களை உடையது, இவை உவர்க் களப்புக்கள். களப்புகள் பல சேர்ந்து மாரிகாலங்களில் ஆறுபோல ஓடிக் கடலுடன் சேருகின்றன. ஆற்றுக்குரிய பல, வளங்களுமிருப்பதால் ஆறு என்றும் அழைக்கப்படுகிறது, ஆற்றின் கழிமுகம் துறைமுகமாயுமிருந்தது. களப்புக்களினூடே பல மைல தூரம் ஓடங்கள் மூலம் உள்ளே செல்லவும் முடிந்தது.

கடலும் கடல் சார்ந்த நிலமும், காடும் காவும், பசும் புற்றரைகளும் புல் வெளிகளும் இம்மானிலமெங்கும் பரந்தும் செறிந்தும் காணப்படுவதால் நெய்தலும் மருதமும் தம்முள் மயங்கியும் முயங்கியும், திரிந்தும் பொலிந்துமிருப்பது புலனாகும்.

சோலைகள் காடுகளிலெல்லாம் பணங்கமழும் மலர் வனங்களுண்டு. அம்மலர்களிலிருந்து தேன் நிரம்பி வழியும், தோடெலாம் எழு மதுகரச் சுரும்பின. அவை தேனையுண்டு மயங்கிச் சொல்லெலாம் செழுங்கீதமிசைத்து ஆடிப்படித் திரிவன. அவை உண்டு மிஞ்சிய தேனைக் கூடுகளிற்சேர்த்துச் சேகரிக்கும். காட்டுப் புறங்களையண்டி வாழ்வோர் அத்தேன கூடுகளைக் காடுகளில்

தேடி எடுத்துப் பிழிந்து தேன் சேகரிப்பர். அவர்கள் உண்டும் அயற்கிராமங்களில் விற்றும் வருவதால் தேனாடு எனவும், இங்குள்ள புல் நிலங்களில் வளர்க்கப்படும் ஆவினங்களிலிருந்து அதிக அளவில் பால் பெறப்படுவதால் ''பானாடு'' (பால் + நாடு) எனவும், இம்மானிலமெங்கும் அமோகமாக விளைவிக்கப்படுவதால் ''நென்னாடு'' (நெல் + நாடு) எனவும், கடலிலும் களப்புகளிலும் பல இன மீன்களும் இறால் நண்டுகளும் பிடிக்கப்படுவதால் மீனாடு (மீன் + நாடு) எனவும் பண்டைப்புகழ் கொண்டது.

ஐந்திணை நிலத்தின் பகுப்புமுடையதாய் அமைந்துள்ள இம்மானிலம் பல மாவட்டங்களை அடக்கியுள்ளது. மாவட்டங்கள் பெரிய கிராமங்களையும் சிறிய கிராமங்களையும் கொண்டுள்ளன. கிராமங்கள்தோறும் மா, பலா, வாழை ஆகிய முக்கனி மரங்களும் கன்னலும் கமுகும் தென்னை பனைகளும் செழித்து வளர்ந்து கிராமங்களை அழகு செய்கின்றன. பல இன மக்களும் பல குடிகளாகப் பண்பு மொழியாட்சியுமுடையோராய் வாழ்ந்த பெருமைகளையுமுடைத்து இவர்கள் வாழ்க்கை பழமையோடும் தொடர்புற்று மிளிர்வதைப் பல சான்றுகள் பகர்கின்றன. காலத்தால் மாற்றமடையினும் நிலைத்திருக்கும் பல பழக்க வழக்கங்களையும் கிராம மக்களின் வாழ்க்கை முறைகளில் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றன.

## ''மட்டு மா நகர்''

தென்னை பனையோடு தேன்தரு சோலையும்
செஞ்நெல் வயலும் செழித்துப் பொலிவுற
வன்மீ னெழில்தரு வாவியில் மீனினம்
துள்ளிக் குதித்திடும் மட்டு மா நகர்.
தேன் கதலி நெல் கரும்பு செறிந்து தோன்றித்
திசழ்ந்திடு மா மட்டு நகர்.

எனப் பலபடப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளது மட்டு மா நகர்.

தேன் சொரியும் மலர் வனங்கள் சூழ்ந்துள்ளது (மட்டு—தேன்) இங்கு தேன் உண்டு. களப்புகளில் மீன்களுண்டு. அதனாற்போலும் தேன்நாடு மீன்நாடு என்ற பண்டைப் புகழுடைத்து.

மட்டுநகர் இரு பெருங் களப்புக்களால் சூழப்பட்டுள்ளது. நகரையண்டிய களப்புப்பகுதிகள் ஆழமுடையன அவை கல்லடிப் பாலம் அமைந்துள்ள பகுதியும் கச்சேரியைச் சூழவுள்ள பகுதிகளுமாகும். இவ்வாழமான நீர்ப்பகுதிகளில் நீரர மகளீர் வாழ்கின்றனர். (பாடும் மீன்கள்) அவர்கள் இசை பாடுகின்றனர். பாடும் இசைகளைப் பௌர்ணமி நடு நிசியில் கேட்கலாம். இதனை முத்தமிழ்

வித்தகர் விபுலானந்தர் ஆராய்ச்சி செய்தும் காதாற்கேட்டும் தாம் இயற்றிய யாழ் நூலில் குறிப்பிட்டுள்ளார். நீருக்குள்ளேயிருந்த நீரரமகளீரைப் பாருக்கு அறியவைத்துள்ளார் என்பது யாழ் நூல்

இவற்றால் மட்டு மா நகர் மீன்பாடும் தேன்நாடெனப் பேச்சு வழக்கிலுள்ளது. நகரிலும் நகர்ப்புறங்களிலும் பல இனமத மக்களும் வாழ்கின்றனர். அரசாங்கத் தலைமையகங்கள் உண்டு. கல்விக்கூடங்கள் பல, மத ஆலயங்கள் பல. கல்வி கற்று நாகரீக மடைந்த மக்கள் வாழும் ஒரு நகரமாக விளங்குகின்றது.

## கோட்டைமுனை :

மட்டுநகர் முன்பு இரு பெரும் பிரிவுகளாக இருந்தன.

1. புளியந்தீவு, 2. கோட்டைமுனை (கோட்டைக்கு எதிர் புறமாக உள்ள முனையாக இருந்ததினால் கோட்டைமுனை என அழைக்கப்பட்டது. முன்பு கோட்டைமுனைப் பகுதியிலேயே அமிர்தகழிக் கிராமமும் அடங்கியிருந்து பின் மாற்றமடைந்தது.

கோட்டைமுனைப் பகுதியில் அடங்கியிருந்த சிறு பகுதிகள் - கோட்டைமுனை, தாண்டவன்வெளி, வெட்டுக்காடு, தாமரைக் கேணி, மோர்சாப்பிட்டி, புளியடிக்குடா, உப்போடை, சீலாமுனை.

அமிர்தகழிப்பகுதியில் அடங்கியிருந்த சிறு பகுதிகள்: அமிர்த கழி, புன்னைச்சோலை, மட்டிக்களி, பாலைமீன்மடு, முகத்து வாரம், கருவேப்பங்கேணி, ஊறணி, நாவலடி.

ஆலயத்தின் நிர்வாகப்பகுதியாக இருப்பதனால் இவ்விரு பகுதிகளும் குறிப்பிடப்படுகிறது.

ஆலய நிர்வாசம் கோட்டைமுனைப்பகுதி வேளாளர் பரம் பரையினருக்கும், அமிர்தகழிப்பகுதி ஏழூர்க் குருகுல வம்சத்தவர் களுக்குமே உரிமை உடையது. (1880ஆம் ஆண்டுப் பரம்பரையினர்)

## அமிர்தகழிக் கிராமம் :

வங்கக்கடலோடு மட்டக்களப்பு வாவி சங்கமமாகும் இடத் தின் அயலில் உள்ளது அமிர்தகழுக் கிராமம். மட்டுநகரில் இருந்து இருமைல் தொலைவாகும். ஒருபுறம் நதிக்கரைக் குடியேற்றங் களைக் கொண்டது. மறுபுறம் அலையோசை மிகுந்த கடல் அதனை அண்மிப்பரந்து செல்லும் வெண்மணற் பரப்புக்கள். அங்கு தாழைகள் குமுக்குக்குமுக்காய் செறிந்து சூழ்ந்து அரண்செய்யும். தென்னைமரங்களும் புன்னைமரங்களும் உயர்ந்து வளர்ந்து நிழல்

பரப்பும். களப்பில் முத்துக்களை விளைவிக்கும் சிப்பிகளும் நத்தைகளும் மற்றும் ஆமைகளும் வெளி ஓட்டு உடலால் தம்மை மூடிக்கொண்டு நீர்வாழ் சுகத்தை அனுபவிக்கின்றன. கயல் ஆரல் போன்ற மீனினங்கள் துள்ளிக்குதித்து நீந்தி விளையாடுகின்றன. கடற் புள்ளினங்கள், பருந்துகள், கழுகுகள், கொக்கினங்கள் வட்டமிட்டுப் பறக்கின்றன. பாம்புகள் வளைந்து வளைந்து நெளிந்து ஓடுகின்றன. கடல் ஓயாது நெய்தல் பண்ணிசைத்து ஒலிக்கின்றது. கடலிலிருந்து காற்று வீசிக்கொண்டிருக்கும். கரையூரவரென்னும் மீன்பிடியாளரின் தோணிகளும் வள்ளங்களும் உயர்ந்தும் தாழ்ந்தும் கடலில் செல்லும் இத்தகைய காட்சிகளையும் சிறப்புக்களையும் உடையது. இக்கிராமம் நீர்வளம் நிலவளம் கொண்டது. தென்னை மரங்கள் செழிப்புறச் சோலைகளாக வளர்ந்து இக்கிராமத்தை அழகுபெறச் செய்கின்றன. கடற்கரையை அண்டித்தோன்றிய உவர்நீர் நிலைகளை இப்பகுதி மக்கள் தோணாக்கள் என்பர். தோணாக்களும் நெய்தல் நில நீர் நிலைகளுமிருப்பதால் கமுகு, வாழை, கரும்பு என்பன பயிர்செய்யப்படுகின்றன. ஒருபுறம் பற்றைக்காடுகள் நிறைந்தும் சோலைக்காடுகளாகவும் இருந்தன. தற்போது அவை அழிக்கப்பட்டு எங்கும் குடியேற்றமடைந்துள்ளன (புன்னச்சோலை, கருவேப்பங்கேணி).

## மாமாங்கம் :

மட்டுநகர் மத்தியிலிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் இப்பதியுண்டு. மட்டுநகர்ப் புறத்திலிருப்பதால் மட்டுநகர் மாமாங்கமென்றும் அமிர்தகழிக் கிராமத்தையண்டியிருப்பதால் அமிர்தகழி மாமாங்கம் என்றும் சொல்லப்படுகிறது.

மட்டக்களப்பென்னும் மாநாடம் நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்த தோணாமுகமாய்,
ஐங்கரன் கோயில் அமிர்தகழிக் கணித்தாய்

என்று பாடியுள்ளார் உயர்திரு. சுவாமி விபுலானந்த அடிகளார் அவர்கள்.

ஆதியில் மாமாங்கக்குளமும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளும் மக்கள் குடியேற்றமற்று நிலச் செழிப்புமில்லாது காடுகளும் பற்றைகளும் நிறைந்து காணப்பட்டது. விந்தனைக் காட்டுப்பகுதிகளில் வாழ்ந்த வேடர்கள் இக்காட்டுப்பகுதிகளில் வேட்டையாடியும் தேன் சேகரித்தும் வந்துள்ளனர். காலஞ்செல்ல சில வேடர் குடும்பங்கள் இப்பகுதிகளில் நிலையாகத் தங்கியும் வாழ்ந்துவந்தனர். இதற்குச் சான்றாக அவர்களுக்கே உரித்தானதும் வணங்கும் தெய்வமுமான (முருகன்) குமாரத்தன் கோயிலொன்று மாமாங்கப்பதியின் மேற்கே ஒரு மைல் தூரத்தில் இருப்பதை இன்றும்

காணலாம். வேடுவர் காலத்தில் கொத்துக்குழைப் பந்தரிட்டு வணங்கிவந்த கோயில் தற்போது காடுகள் வெட்டப்பட்டுக் குடியேற்றம் பெற்றுள்ளது. கோயிலும் அங்குள்ள மக்களால் கற்களினால் சிறப்பாக அமைக்கப்பட்டுப் பூசைகளும், விழாக்களும் நடைபெற்றுவருகின்றன. வேடர்கள் வணங்கிவந்த மற்றுமொரு தெய்வமான வீரபத்தினிக் கோவிலொன்று மாமாங்கப் பதியின் வடமேற்கே காட்டினுள் இருமைல் தூரத்தில் இன்றும் நிலைத்துள்ளது. வருடாந்த விழாவினை வேடர் சந்ததிக் குடியினரே தொடர்ந்தும் செய்துவருகின்றனர். மற்றும் அவர்கள் வணங்கிவந்த தெய்வங்களான தெற்கில் காலபைரவி, கிழக்கில் கடலாட்சி அம்மன், பரிகலபைரவ ஆலயங்களும் இருந்தன. காலவரையில் வேடர் பரம்பரை அருகியது. காடுகள் வெட்டப்பட்டுக் குடியேற்றங்கள் பெற்றன.

1930 ஆம் ஆண்டளவில் மாமாங்கத்தின் தென்புறமாகவும் தென்மேற்குப் புறமாகவும் உள்ள காடுகள் வெட்டப்பட்டு அவற்றின் ஊடாக மட்டக்களப்புப் புகையிரதப்பாதை போடப்பட்டதாக அறியமுடிகிறது. இதன்பின்பே மேற்குப்புறமாகவும் தென்புறமாகவும், சேனைக் குடியேற்றங்கள் ஆரம்பமாகின. சேனைகளில் குடியேறியவர்கள் ஜீவனத்துக்காகச் சிறு பயிர்களைப் பயிரிட்டும் அண்டிய காடுகளில் விறகுகளை வெட்டியும் காட்டிலுள்ள நாவல், பாலை, ஈச்சை, காரை, துவரைப் பழங்களைப்பிடுங்கி அயற்புறங்களில் விற்றும் வாழ்க்கை நடத்தினர். பின் நிலையான பயிர்களையும் தென்னை பனை போன்றவற்றையும் கனிதூங்கும் முந்திரிகை மரங்களையும் நாட்டித் தோட்டங்களாக்கினர். எனினும் வடபுறம் தவிர்ந்த ஆலயச் சூழல் பற்றைக்காடுகளாகவே காணப்பட்டது. 1950 ஆம் ஆண்டின் பின்னரே மாமாங்கப்பதியின் சூழலில் உள்ள காடுகளும் பற்றைக்காடுகளும் முற்றாக அழிக்கப்பட்டுக் குடியேற்றங்கள் பல உண்டாயின. சிறு தெருக்களும் போடப்பட்டுத் தற்போது அவை பெரிய தெருக்களாக மாற்றமடைந்துள்ளன. நகர் புறங்களிலுள்ளவர்களும் ஏனைய அயற்கிராமங்களிலுள்ளவர்களும் வந்து குடியேறி உள்ளனர்.

### மாமாங்கக்குளம் :

(1) இக்குளம் ஓர்கால மாமங்கை நதி எனவும் வழங்கியது. இன்று இந்நதியிருந்த இடத்தில் குளம் மாத்திரம் இருந்தாலும் வங்கக்கடலில் கிழக்குக்கரையை மிக அண்டித் திருக்கோயில் என்னும் திருப்பதியிலிருந்து திருகோணமலை என்னும் திருப்பதிவரை பாய்ந்து ஓடிய தடம் அழியவில்லை. இன்று இந்நதிப் பள்ளத்தாக்கு மணலால் மூடப்பட்டிருந்தாலும் மழை காலத்தில் தண்ணீர் அப்பள்ளத்தாக்கிலே பல மைல் தூரம் தேங்கிநிற்பதைக் காணலாம். கடல் கோள்களினால் சிதைவுற்று மறைந்த இந்நதியின் சான்றாக மாமாங்கக்குளம் இன்றும் நிலைத்துள்ளது.

(2) ஆதியில் மாமாங்கக்குளம் அதனை அடுத்திருந்த நெய்தல் நிலநீர் நிலைகளுடன் தொடர்புகொண்டு மாரிகாலத்தில் நதி போன்று ஓடிக் கடலுடன் கலப்பதினாற்போலும் மாமாங்க நதி எனப்பட்டது.

மாமாங்கக்குளம் அனுமார் தீர்த்தம், காக்கை தீர்த்தம், பழையாறு நற்றண்ணீர் மடு, பாலமீன்மடு, மட்டிக்கழி, ஓடையெனப்படும் கிண்ணையடித்தோணா என்ற ஏழு தீர்த்தங்களுடன் (தொடர்புகொண்டு) தொடர்ந்தும் சேர்ந்துமுள்ளது. இவற்றிலே சில காலப்போக்கில் தூர்ந்தும் அழிந்தும் மறைந்தும் போயிருக்கலாம். ஆனால் அவை இருந்த தடங்கள் அழியவில்லை. மாமாங்கக் குளத்தின் மேற்குப் (பக்கத்தில்) புறத்தில் சேர்ந்து இருப்பது அனுமார் தீர்த்தம் என்று சொல்லப்படுகிறது. சீதையைத்தேடி இலங்காபுரியிலுள்ள அசோக வனத்தையடைந்த அனுமன் தனது வாலினால் எரியூட்டியபின் அணையாது பற்றிக்கொண்டிருந்த தீயை அணைப்பதற்கு மாமாங்கக்குளத்தின் மேற்குப்புறத்தில் உள்ள குளத்தில் வாலைவிட்டு அமிழ்த்தி அணைத்ததாகக் கூறப்படுகிறது. இலங்கையினைச் சுட்டெரித்த அனுமன் வாலில் இருந்த பொருந்தீயணைத்த தீர்த்தம் எனவும் பாடப்பட்டுள்ளது. மற்றய தீர்த்தங்களுக்கும் பெயர் காரணங்கள் இருந்திருக்கலாம். தற்போது அவை தெரிந்தில.

ஸ்ரீ இராமபிரானுடைய பணிப்பில் இந்தியா சென்று காலந்தாழ்த்தி இலிங்கத்துடனும் அவிமுத்தித் தீர்த்தத்துடனும் வேகமாகப் பாய்ந்துவந்த அனுமனுடைய பாதங்கள் பட்ட சுவடுகளே பள்ளங்களாகித் தீர்த்தங்களாயின என்றும் கருதப்படுகின்றன.

(3) மாமாங்கக்குளம் நிறைந்த சந்தணச்சேறு கொண்டது. மெல்லிய (தன்மை) பசுமை நிறமான இச்சேறு உடம்பின் வெளிப்புற நோய்களை மாற்றுந்தன்மை கொண்டது. ஆனதால் அமிர்தச்சேறு என்றும் சொல்லபபடும். பசுஞ்சந்தணம்போற் குளிர்மையாயுமிருப்பதால் சந்தணச்சேறு என்றும வழங்கப்படுகிறது. குளத்தை அடுத்துள்ள நீர் நிலைகளான தோணாக்களின் அடிகளிலும் அயலில் உள்ள ஊர்க்கிணறுகளின் அடிகளிலும் இந்த அமிர்தச்சேற்றின் படிவுகள் உள்ள காரணத்தினால் குளத்தையடுத்துள்ள ஊரும் அமிர்தகழி என்று பெயர் பெற்றுள்ளதுபோலும்.

பாற்கடலைக் கடைந்து வெளிப்பட்ட அமிர்தத்தை மகாவிஷ்ணு தேவர்களுக்கு ஈந்ததைப்போன்று அவரின் அம்சமான ஸ்ரீ ஆராமபிரான் தனது அருட்சக்தியினால் அமிர்தத்தை இத்திருக்குளத்தில் சேர்ந்துள்ளதால் இக்குளத்தீர்த்தம் புனிதமும், புதுமையும், வல்லமைகளையும் உடையதாக மதிக்கப்படுகிறது.

மாமாங்கக்குளச் சிறப்பு :

(4) இக்குளத்தில் உயர்ந்தசாதி வெண்சங்குகள் வந்து சேர்ந்து ஊர்கின்றன. ஊரிகள் ஓதையிடுகின்றன. பக்கங்களில் தாழைகள் பூத்துக்குலுங்கி மணம் கமழுகின்றன. வாவியின் அழகை வர்ணனைசெய்யும் பூவினங்கள் நிறைந்துள்ளன. செந்தாமரை வெண்டாமரைகளும் அல்லி ஒல்லி மலர்களும் மலர்ந்து சுடர்விடுகின்றன். கருங்குகளை, செழுங்கழு நீர் போன்ற ஏனைய நீர்ப்பூக்களும் பூத்துக்குலுங்குகின்றன. தூயமருக்கொழுந்தும் நறுமணம் வீசிப்பரப்பும் நீரில் மீனினங்களான கயல், ஆரல், விரால் என்பன துள்ளிப்பாய்ந்து விளையாடித் திரிகின்றன. சின்னஞ்சிறிய சிட்டுக்களும் வண்டினங்களும் அங்குமிங்கும் பறந்துதிரிந்து ஆர்ப்பரிக்கின்றன. கொக்கினங்களும் நாரைகளும் துள்ளிக்குதிக்கும் மீன்களைக் கௌவிப்பரக்கின்றன. மற்றயவை தூங்குவனபோல நடிக்கின்றன. குளக்கரை மருங்குகளிலெல்லாம் கீரிப்பற்றை எனப்படும் சண்ணாச்செடிகளும் கிண்ணை, வம்மி போன்ற மரங்களும் வளர்ந்து நிழல் பரப்புகின்றன. நாணல் எனப்படும் தூய்மையுடையதான தர்ப்பை வேறு புல்லினங்களும் அடர்ந்து செழிப்புற வளர்ந்துள்ளன. காலவரையில் இவை வெளியாக்கப்படவேண்டும். குளம் (30) முப்பது ஏக்கர் விஸ்தீரணமுடையதாக இருந்தும் மூன்று பக்கங்களையும் சுவீகரித்து கோயிலும் சுனையும் சேரக்குடிகளும் மருவி வாழ்கின்றனர்.

ஆலயச்சூழல் :

(1) ஆலயம் அமைந்த இடம் அமைதியான சூழலில் ஆல், அரசு, புன்னை, நாவல் கொக்கட்டி, குருந்தை, வில்வை முதலான மரங்கள் எங்கும் பரந்து நிழல் செய்யும் குளிர்ந்த நெய்தல் நிலப் பரப்பிலமைந்துள்ளது. தலவிருட்சங்கள் போன்றும் பல குருந்தை மரங்களிருந்தன. தற்போது ஒரு குருந்தை மரம் மட்டும் பல்லாண்டுகளாகியும் ஒரேபடித்தாய் கோயிலின் நேர் வாசலில் அருள் பரப்பி நிற்கின்றது. அதனைக் கண்ணுறும்போது மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இறைவன் குருந்தைமர நிழலின் கீழிருந்து அருளுபதேசம் செய்த வரலாற்றினை நினைவூட்டுகின்றது.

அக்காலத்தில் கதிர்காம யாத்திரை செய்யும் அடியார்கள் குருந்தமர நிழலில் வேலை வைத்து வழிபட்டு ஆலய மடத்திலே தங்கிச்செல்வர். தொடர்ந்தும் வரும் கதிர்காம உற்சவகாலங்களுக்குமுன் நாட்டின் பல இடங்களிலுமிருந்து அடியார் கூட்டங்கள் இங்குவந்து கூடித் தங்கிச்செல்கின்றனர்.

(2) ஆலயத்தின் வடபுறமாக உள்ள பளிங்குபோன்ற நீர்ப் பரப்பினையுடைய மாமாங்கக்குளத்தில் படிந்துவரும் தண்ணென்ற

பூங்காற்றானது ஆலயச்சூழலையும் அங்குவரும் அடியார்களையும் குளிர்மையும் அமைதியும் உறச்செய்து எந்தக் கொடிய வெயில் வேளையிலும் நிறைந்த இன்பத்தையளித்துக்கொண்டிருக்கிறது. இவைகளால் மலமயக்கமற்ற மனவளம் நோயில்லாத உடல் வளங் களையும் வேண்டுமடியார்க்கெல்லாம் ஈந்து ஆன்மவளம் சுரந்து நிற்கும் காமதேனுவாக இந்நாட்டில் விளங்கிக்கொண்டிருக்கின்றது.

இத்தலத்தின் பழமைமைக் காட்டுவதற்கு வழங்கப்பட்டு வரும் கர்ணபரம்பரைக் கதைகள் பல. இராமாயணக் காலத்துக்கு முற்பட்டதாகக் காட்டுவதற்கும், இராமாயண காலப்பகுதியைச் சேர்ந்ததாகக் காட்டுவதற்கும் அமைவாக உள்ளன.

## ஆலயம் அமைந்த வரலாறு :

சிவன் தந்த வலிமை பெரிதென்று இராவணன் சீதையைக் கவர்ந்துவந்து அசோக வனத்தில் சிறை வைத்திருந்த காலம் பவ வினைக்காளாகி இராமபாணத்தினால் பட்டழிந்து ஒழிந்த சமயம் மனமது கலங்கித் துவண்டு நின்ற ஒப்புவமையற்ற நிலமங்கை சீதையின் சிறையினை விடுத்து உடன் அழைத்து வழிநடை கொண்டகாலை செல்லும் வழியில் சற்றுக் களைப்புற்றதனால் இளைப்பாற எண்ணினார். கடலிடம் சார்ந்த தூய தனியிடமாக ஆல், அரசு, திருவாத்தி, நெல்லி, நாவல், கொக்கட்டி முதலிய மரங்களை ஓரிடத்திற்கொண்டு பஞ்சவடி போன்றமைந்து கண் களுக்கும் மனசுக்கும் இதமானதாகவும், காடுகள் நிறைந்திருந்தது மான இப்பகுதியில் ஒருபோது தங்கி இளைப்பாறினார். சிவபூசை செய்ய விருப்பம் மேலிடச் சிவபூசை செய்வதற்குரிய சிவலிங்கம் ஒன்றைக் கொண்டுவருமாறு உடன் வந்த அனுமனைப் பணித் தார். இலிங்கம் தேடி விந்தியமலை சென்ற அனுமன் விரைந்து வருவானென்று எதிர்பார்த்திருந்தார். அற்றைநாளில் அது தாமத மாகவேயிருந்தது. குறித்த காலத்தில் சிவபூசையை நிறைவேற்ற எண்ணினார் ஸ்ரீ இராமபிரான். மணலில் பிசைந்து இலிங்க மொன்றை ஆக்கினார். அதற்கு அபிசேகம் செய்வதற்காகத் தனது சோதண்டத்தை நிலத்தில் ஊண்டிப் பதித்தார். அப்பள் ளத்திலிருந்து சுரந்து தோன்றிப் பாய்ந்த புனித நீரைப் பெற்று இலிங்கத்தை அபிசேகஞ் செய்தார். பத்திர புஷ்பங்களால் அர்ச் சித்துப் பூசை செய்துமுடித்தார். அப்பள்ளம் நீர் சுரந்து நிரம்பிக் குளமாகியது. ஸ்ரீ இராமபிரானுடைய ஆணைப்படி விந்திய மலையிலிருந்து காலந்தாழ்த்தி அனுமனால் கொண்டுவரப்பட்ட இலிங்கம் இராமபிரானால் ஆக்கப்பட்ட திருக்குளத்தின் நடுவில் புதைத்துவிடப்பட்டது. அந்தப் புண்ணிய இலிங்கத்தின் மகிமை யினால் தன்னுட் படிவோர்மீது சேர்ந்துள்ள பாவங்களனைத்தை

யும் போக்கவல்ல திருவருட் சக்தி இத்திருக்குளத்துக்கு நிரந்தரமாகக் கிடைக்கலாயிற்று என்றும் இத்தீர்த்தத்தின் மகிமை சிலாகிக்கப்படுகிறது. காசியிலிருந்து அனுமனால் கொண்டுவரப்பட்ட அவிமுத்தித் தீர்த்தமும் இக்குளத்தில் கலக்கப்பட்டது என்பதும் ஒரு வரலாறு.

அன்றியும் காசியிலிருந்து வந்த முனிவரொருவர் தம் கமண்டலத்திற் கொண்டுவந்த கங்கை, யமுனை, காவேரி, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, தாமிரபரணி, சேது முதலான ஒன்பது மங்கைப் பெண்களின் பெயரமைந்த தீர்த்தங்களையும் இத்திருக்குளத்தில் கலந்து நீராடி இராமலிங்கத்தை வழிபட்டுப் பெரும் பயன்பெற்றார் என்றும், மங்கை நதிகளின் தீர்த்தங்கள் கலக்கப்பட்ட திருக்குளமானதால் மாமங்கைத் தீர்த்தமென்று பெயர்பெற்றது எனவும் சொல்லப்படுகிறது.

அவிமுத்தித் தீர்த்தம் என்பது வடமொழிச் சொல். தன்னிடை மூழ்கி எழுந்தார்க்கு நற்பயன் அளித்தலில் மாறாத பெருஞ்சிறப்புடையது. தீவினைப் பயன்களை நீக்கும் ஆற்றல் பெற்றுள்ளது இத்திருக்குளம்.

அனுமனால் காலந்தாமதித்துக் கொண்டுவரப்பட்ட சிவலிங்கத்தை வைப்பதற்காக மண்ணினால் செய்துவைக்கப்பட்ட இலிங்கத்தைப் பெயர்த்தெடுக்க அனுமன் முயன்றபோது அவ்விலிங்கம் பெயர்க்கப்படாமலிருந்ததாகவும் பின்பு ஏழுவிதமான நீர் நிலத்தில் தோண்டி எடுத்து அவ்விலிங்கத்தைப் பூசித்து அயோத்தி சென்றதாகவும், அனுமனால் தோண்டப்பட்ட இடங்களே மாமாங்கக் குளத்தை அண்டியிருக்கும் சிறுசிறு குளங்கள் என்றும் ஒரு வரலாறு கூறுகின்றது.

## இலிங்கம்பற்றிய வரலாறு :

இத்தலத்தில் அமைந்துள்ள இலிங்கம் காத்தற் கடவுளாகிய மகாவிஷ்ணுவின் அம்சமான ஸ்ரீ இராமபிரானின் கைவண்ணத்தினால் உருவாக்கப்பட்டு அவரால் அபிசேகம்பண்ணி வழிபாடு செய்யப்பட்டது. நீண்டகால இடைவெளிக்குப் பின் இலிங்கம் அமைந்துள்ள இடம் சோலைக்காடுகளாலும், பற்றைக் காடுகளாலும், மர வேர்களாலும் மூடி வளர்ந்து மறைந்திருந்தது. காடுகள் நிறைந்து அப்பகுதிகளில் வாழ்ந்த வேடன் ஒருவன் வேட்டையாடிக் களைப்படைந்து ஓர் ஆலமர நிழலில் தனது வில், அம்பு, கோடெரி முதலியவற்றை வைத்துச் சிறிது துயின்றான். அப்போது இலிங்கம்பற்றித் தரிசனம் ஒன்று கண்டான். தான் கண்ட கனவின்படி வில்லைச் சாத்தி வைத்திருந்த முள்

ளாவ மரத்தைச் சுற்றிக் கிளறினான். வேர்களையும் பற்றைகளையும் வெட்டி ஒதுக்கினான். தான் கனவிற் கண்ட இலிங்கம் அங்கே காணப்பட்டது. தன் இனத்தவர்களைக் கூவி அழைத்து கூட்டிக் காட்டினான். எல்லோரும் சேர்ந்து அவ்விடத்தில் கொத்துக் குளைப் பந்தலிட்டு வழிபாடாற்றினர். கொடிய வன விலங்குகளின் கூட்டத்தோடு குடிவாழ்ந்த வேடுவரின் தெய்வமுமாகியது.

## மற்றொரு வரலாறு கூறுவது:

ஸ்ரீ இராமபிரானால் வழிபாடு செய்யப்பட்ட இலிங்கமானது காலப்போக்கில் அடர்ந்த சோலைக் காடுகளாலும், பற்றைக் காடுகளாலும் சூழ்ந்து மறைக்கப்பட்டிருந்தது. ஆலயமின்றி அமர்ந்தகாலை சோலைகள் சூழ சுகமுடனிருந்தது. விந்தனைக் காடுகளில் வாழ்ந்த வேடர்கள் தேன் எடுப்பதற்காகவும், வேட்டையாடவும் இப்பகுதிக் காடுகளுக்கு வருவர். தேன் எடுக்கவந்த வேடனொருவன் நாவல் மரமொன்றில் தேன்கூடு இருப்பதைக் கண்டான். அத்தேனை எடுக்க நாவல் மரத்தைக் கோடெரியால் வெட்டினான். வெட்டும்போது கோடெரி தவறி இலிங்கமிருந்த இடத்தில் சிதறி விழுந்தது. அதனைக் கவனியாது தேனை எடுத்துக்கொண்டு மரத்தடியில் இளைப்பாறினான். அவன் சற்றுக் கண்ணயரும்போது கனவில் சிவலிங்கப்பெருமான் தோன்றி உன்னுடைய கோடெரியால் அடியுண்ட எனது உடல் வலி எடுக்கிறது. அவ்வலி நீங்க சுடுதண்ணீர் வைத்து வார்க்கும்படி கூறியதாகவும் உணர்ந்தான். வேடன் விழித்தெழுந்து ஓடிச்சென்று பார்க்கும் போது இலிங்கமொன்று இருப்பதையும், அதிலே கோடெரி பட்ட (தடம்) அடையாளம் தெரிவதையும் கண்டான். மெய்தானரும்பி விதிர்விதித்துக் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி உள்ளம் வெதும்பி பயபக்தியுடன் வழிபட்டான். பக்கங்களில் ஓடிச் சுடுநீர் வைத்து முழுக்காட்டினான். பத்திரபுஷ்பங்களைச் சொரிந்து வணங்கினான். தன் இனத்தவர்களை அழைத்துவந்து காட்டிச் செடி கொடி பற்றைகளை வெட்டி வெளியாக்கிப் பந்தரமைத்து இலைகுளைகளால் வேய்ந்து வழிபாடாற்றிவந்தான். காலவரையில் வேடர் குடியேற்றங்கள் அருகியது. கொடி செடிகளும், பற்றைக் காடுகளும் மண்டின. தொட்டம் தொட்டமாக வாழ்ந்த மாடுகள் மேய்க்கும் இடையர்கள் தங்கள் கால்நடைகளைத் தண்ணீர் காட்டக் குளத்துக்கு வருவர். ஒருநாள் அப்படி வரும் ஒரு இடையனின் காலில் ஏதோ ஒன்று இடறுப்பட்டது நன்றாகப் பார்த்தபோது அது ஒரு இலிங்கமாக இருப்பதைக் கண்டு குளைகளால் மூடி நீர்வார்த்து வணங்கிவந்தான். இதையறிந்து அயிலில் வசித்த கோட்டைமுனையில் உள்ளவர்களும், அமிர்தகழியில்

வசித்தவர்களும் சேர்ந்து (களிமண்ணினால்) இவ்விடத்தில் ஓர் ஆலயத்தை அமைத்தனர். அக்கால வேடர் பரம்பரையிலுள்ள வர்களாகக் கருதப்படும் மாமாங்கன், பிள்ளையான் ஆகிய இருவ ரிடமும் கோட்டைமுனையில் வசித்த வேளாளர் குலத்தினரும், அமிர்தகழியில் வசித்த குருகுல வம்சத்தினரும் சேர்ந்து செய்து கொண்ட வாய்மூல ஒப்புதலின்படி மாமாங்கன் பிள்ளையான் என்பதைச் சேர்த்து மாமாங்கப் பிள்ளையார் எனப் பெயர் வைக் கப்பட்டு இக்கோவில் இரு சமூகத்தவராலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலை ஆதரித்த மெய்யடியார்களில் ஒருவ ராகிய பரிகாரியார் கதிர்காமர் என்பவருக்கு மாமாங்கேஸ்வரப் பெருமான் கனவில் தோன்றி மேற்படி ஆண்டு மாசிமகத்தன்று தன்னை மாமாங்கப் பிள்ளையாராக ஆதரிக்கும்படி கட்டளை யிட்டருளின் எனவும் பரம்பரையாகப் பேசப்பட்டுவந்துள்ளது.

1837ஆம் ஆண்டு மட்டக்களப்பு நில வரைபடத்தில் ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயம், ஸ்ரீ முத்துக்குமார வேலாயுத சுவாமி, கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில், திமிலைதீவு கிருஷ்ணன் கோயில் என்பன பதியப்பட்டுள்ளது. ஆலயங்கள் களிமண்ணால் கட்டப்பட்டிருந்தன.

1880ஆம் ஆண்டுப் பரம்பரையினரைக் கொண்டே ஆலய நிர்வாகம் நடைபெறுகின்றது. 1888ஆம் ஆண்டு பங்குனி 19ந் திக திய அம்பிகைபாகப்பிள்ளையவர்களால் எழுதப்பட்ட உறுதிப்படி கோட்டைமுனை வேளாளர்குலத்தைச் சேர்ந்த பரிசாரியார் கதிர் காமர், பொ. த. சின்னத்தம்பி, அவர் மைத்துனர் நெல்லிநாத பிள்ளைக்கும், குருகுல வம்சத்தவர் அமிர்தகழி ஆ. முத்துப் பிள்ளை சின்னத்தம்பி, சணபதிப்பிள்ளை குடும்பத்தவர்களுக்கும் உள்ள கோயிலாக உரிமையாக்கப்பட்டிருந்தது.

கொடியேற்றம் நடைபெறும்போது கூறும் ஆசீர்வாதத்தில் மட்டக்களப்புத் தேசம் முழுவதும் எல்லைகள் கட்டுப்படுத்தி சைவமக்கட்கும் ஆசீர்வாதம் சொல்லப்படுகிறது.

1888இல் பெரியபோரதீவுக் குழந்தைவேல் ஆச்சாரியும், காளிக்குட்டி ஆச்சாரியும் சேர்ந்து இக்கோயில் கட்டியதற்கான ஒப்பந்தக் குறிப்புகளுமுண்டு.

மூலஸ்தானம் கட்டும்போது இச் சிவலிங்கமூர்த்தியை நீர் மட்டத்தின் கீழும் தோண்டிப்பார்த்து அடியைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் தெய்வ மேன்மையை உணர்ந்து ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆரம்பகாலத்தில் சிவலிங்கமூர்த்தியாகவே வழிபாடுகள் நடைபெற்றன. ஆலய நிர்வாகத்தினரின் நன்மை கருதியும், பூசகர்களின் நன்மை கருதியும் பிள்ளையார் வழிபாடாக மாற்றப் பட்டது. பொதுமக்கள் மாமாங்கேஸ்வரராகவும், மாமாங்கப் பிள்ளையாராகவும் வழிபடுகின்றனர்.

## ஆலய அமைப்பு :

கர்ப்பக்கிரகம் சிவலிங்கமூர்த்தி

நீர்மட்டத்தின் கீழும் அடி கண்டுபிடிக்கமுடியாத சுயம்பு லிங்கமாகிய சிவலிங்கமூர்த்தியைக் கர்ப்பக்கிரகமாகக் கொண்டு ஆசனக்கற்களை அணைத்துச் சிம்மாசனமாக்கிக் கற்கள் பதித்தும், அரை சாந்து பூசியும், மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகா மண்டபங்கள் என்பன செங்கல், கருங்கல் என்பவற்றாலும் கட்டப்பட்டன. இவை பழைய குறிப்புக்களில் உண்டு.

மூலஸ்தானத் தூபிகளில் முதல் அடுக்காக உள்ள கீழ்வரிசையில் சிவபெருமானின் திரு அவதாரங்களும், அதற்கு மேல்வரிசைகளில் விநாயகரின் திரு அவதாரங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. அவை ஆலயத்தின் ஆரம்ப வழிபாட்டையும், தற்போதைய வழி பாட்டு முறையையும் நன்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. 1963 ஆம் ஆண்டு புணருத்தாரண வேலைகள் செய்யும்போது அவை மாற்றப்பட்டன.

1888 ஆம் ஆண்டில் கொடியேற்றத் தம்பம் கட்டப்பட்டுப் பெரிய அளவிலான கோயில் அமைந்தது. முதலாவது கும்பாபிசேகமும் நடைபெற்றது. அக்காலம்முதல் கொடியேற்றத்தினையடுத்து ஐந்து திருவிழாக்களும், தீர்த்தோற்சவமும் நடைபெற்றது. பின் திருவிழாக்களை அதிகரித்துப் பத்து நாட்களாக மாற்றப்பட்டன. 9 திருவிழாக்களும், 10 ஆம் நாள் தீர்த்தோற்சவமுமாகும். அக்கால எல்லையில் நடைபெற்ற கோயிற் கட்டட வேலைகளுக்கு செங்கற்களை வழங்கியும், சிரமதான வேலைகளைச் செய்தும், வேலை செய்வோர்க்கு உணவுகளை வழங்கியும் கொத்தியாவலை, கன்னன்குடா, ஊறணி, செங்கலடி முதலிய கிராமங்களில் வாழ்ந்த மக்களும் மனமுவந்து அளித்துள்ளனர் எனவும் பேசிக்கொள்ளப்படுகின்றது. 1963 ஆம் ஆண்டு ஆலயத்தில் சில புணருத்தாரண வேலைகள் செய்யப்பட்டுக் கும்பாபிசேகமும் நடைபெற்றது. அதிக காலமாக உள் வீதியில் கட்டப்படாமலிருந்த முருகன் கோயிலும் அதனைச்சேர்ந்த மண்டபமும் 1993இல் கட்டிமுடிக்கப்பட்டது. உள் வீதியில் எஞ்சியிருந்த இரு துண்டு மண்டபங்களும் 1994இல் புதிய நிர்வாகத்தினரால் நிறை

வெய்தியது. முன் மண்டபம் கலவரத்தால் சிதைந்து உடைந்திருந்தது. அதை அகற்றித் தற்காலிகமாக ஓலையால் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டது. தற்போது இராசகோபுரம் அமைப்பதற்காக அம்மண்டபமும் நீக்கப்பட்டுள்ளது. கோபுர வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சுயம்புலிங்கமாகத் தோற்றம் பெற்று மாமாங்கப் பிள்ளையாராக மாற்றமுற்று பிரசித்தி பெற்ற ஆலயமாக ஏற்றமடைந்துள்ள இவ்வாலயத்தின் ஆரம்பகாலம் கணித்தறியமுடியாதுள்ளது.

மாமாங்கேஸ்வரர் என்னும் பெயர்கொண்டு இக்கோயில் சிவன் கோயிலாதல்வேண்டும். மூலஸ்தானத்திலமைந்துள்ள மூலமூர்த்தி சுயம்புலிங்கமாகும். பெயர்த்தெடுக்கமுடியாதது. வாலஸ்தாபஞ் செய்யமுடியாதது. வரலாற்றுப்படி இங்குள்ள மூல இலிங்கம் காத்தற் கடவுளாகிய மகாவிஷ்ணு மூர்த்தியின் ஓர் அவதாரமான ஸ்ரீ இராமபிரானின் கைவண்ணத்தினால் ஆக்கப்பட்டு அவரால் வழிபாடு செய்யப்பட்டது. இதேபோல தென் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரத்திலும் ஒரு இலிங்கம் அவரால் ஆக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. இவ்விரு இலிங்கங்களும் உலகில் மிக மேலானதும் சக்திவாய்ந்ததுமாக மதிக்கப்படுகின்றன.

மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் விநாயக வழிபாட்டு முறையிலேயே பூசைகள் நடைபெறுகின்றன. மூலமூர்த்திக்கு அபிசேகம் நடைபெறும்போது இவ்விலிங்கத்தை இன்றும் நேரில் காணலாம். அபிசேகம் முடிந்தபின் அங்கியிடப்பட்டு அடியார்களுக்குக் காட்சியளிப்பதால் வினாயகரே எழுந்தருளியிருக்கிறார் என்று காண்கின்றார்கள் – வணங்குகின்றார்கள். சிவலிங்கத்துக்கான வழிபாட்டு முறைகள் பிள்ளையாருக்குரிய முறையில் மாற்றம் பெற்றுள்ளன. இவற்றினால் மாமாங்கப் பிள்ளையார் கோவிலென்றே அழைக்கின்றனர்.

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள சமயமே சைவம். மட்டக்களப்புத் தமிழகத்துச் சைவமக்கள் முருகக் கடவுளுக்கும் விநாயகக் கடவுளுக்கும் செய்யும் வழிபாடுகளின்மூலமே சிவனை வணங்கப்பெற்றனர். இதற்குச் சான்றாக மட்டக்களப்பிலுள்ள மூன்று பழம்பெருங் கோயில்களை எடுத்துக்காட்டலாம். ஒன்று கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றி ஈசுவரர் கோயில். மற்றயது களுதாவளைப் பிள்ளையார் கோயில். மற்றது ஸ்ரீ மாமாங்க ஈசுவரர் கோயில்.

1. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றி ஈசுவரர் கோயில். முருகவழிபாட்டின் முறைப்படி பூசைகள் நடைபெற்றுப் பின் அந்நிலை மாறிச் சிவன் கோயில் என்ற தனித் தன்மையுடன் மிளிர்கின்றது.

2. களுதாவளைப் பிள்ளையார் கோயில்.

சுயம்புலிங்கமாகத் தோன்றிய மூலமூர்த்தியைப் பிள்ளையார் எனப் பெயரிட்டு வணங்குகின்றனர். நின்ற நிலையில் இருந்து பிள்ளையாராக அருள் செய்கிறார்.

3. ஸ்ரீ மாமாங்கேஸ்வரர்.

மூலமூர்த்தி ஈஸ்வரர், ஆனால் பிள்ளையாராக வழிபடுகின்றனர்.

கிழக்கிலங்கையில் மூன்று சிவலிங்கங்கள் உண்டு. அவை 1. கொக்கட்டிச்சோலைச் சிவன் கோயில், 2. களுதாவளைச் சிவன் கோயில், 3. ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் சிவன் கோயில் எனவும் கூறுகின்றனர்.

மட்டக்களப்பிலே முருகன் கோயில்கள் இல்லாத ஊர்களிருந்தாலும் பிள்ளையார் கோயில் இல்லாத ஊர்களைக் காணமுடியாது. மட்டக்களப்பு வாழ் சைவமக்கள் விநாயக வணக்கத்தை மேம்படுத்தியுள்ளனர் என்பதை இவைகளால் அறியக்கூடியதாக உள்ளன.

## இறை சக்தி:

வேதம் மிகம் பழமையானது. வேதகால மக்கள் இயற்கைச் சக்திகளையே இறைவனாக வழிபட்டனர். இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன், இறைவன் என்று எழுதிக் காட்ட முடியாதலின் விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்கான் விளங்கொளியாய் எண்ணிறைந்து எல்லையில்லாதானால் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான். எல்லாவற்றுக்கும் மூலப்பொருளாய் ஒன்றாயுள்ள பரம்பொருளே பலவாகிப் பல்கிப் பெருகி இவ்வுலகெலாம் பரந்து விளங்குகின்றது. அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ, அன்புடைய மாமனும் மாமியும் நீ என இனமுறை கூறிக் கொண்டாட முனைகின்றபோது ஊர்பேரின்றி, குணம்குறியில்லாது உள்ள இறைசக்தியுடன் சொந்தமும் கொண்டாட முனைகின்ற மக்கள் அதற்குப் பல பெயர்கள், ஊர், உறவு, உறையுள், உணவு ஆகியவற்றையளித்து வணங்குகின்றனர். மனத்தை ஒருமுகப்படுத்திப் போற்றித் தியானிப்பதற்காக அதற்கு ''உருவினைக் கற்பித்து ஓர் உருவம் ஒரு நாமம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் நாமம் கூறித் தெள்ளோணம் கொட்டோமோ'' என்ற மாணிக்கவாசகரின் மொழிக்கிணங்க பலவித பெயர்களைக் கூறி வழிபடுகின்றனர், ஆலயங்களும் அமைக்கின்றனர். எங்கும் பரந்துள்ள இறைசக்தியை ஓரிடத்திற் குவித்து அதன் அருளையும் பயனையும் பெறுதற்கு

அமைக்கப்பெற்றவையே திரு உருவங்கள். பொதுநோக்கில் ஒரே பொருளாயிருந்த இறைசக்தி மக்களின் பரிபக்குவ நிலைக்குத்தகப் பல வடிவங்களில் காட்சி தருகின்றது. உருவமற்ற இறைவன் உருவப் பொருள்களையே அறியும் ஆற்றலுடையனவாகிய உயிர்களின் இறலாமையை உணர்ந்து உயிர்கள் தன்னை வணங்கி உய்தல் வேண்டும் என்ற தனிப்பெருங் கருணை காரணமாகத் தன்னில் வேறின்றி நெருப்பில் சூடுபோல் இணைபிரியாது நிற்கும் சக்தியினால் அளவற்ற திருமேனிகளைக் கொண்டு அருள்புரிகின்றான். சிவனும் சக்தியும் இரண்டாகியபோதும் இரண்டும் இரண்டு தனிப் பொருட்களல்ல ஒரே பொருளாகும். இத்தகைய பெருமைவாய்ந்த இறைவன் உயிர்கள்மீது கொண்ட தனிப்பெருங் கருணையினால் படிப்படியாக உருவநிலை பெறுகின்றான். இறைவனுக்கு உருவமில்லை. எல்லாவுருவங்களிலுமுள்ளான். பார்க்குமிடமெங்கணும் நீக்கமற நிறைந்துள்ளான். அருவமும் உருவமாகி அனாதியாய் பிறவாய் ஒன்றாய் பிரம்மமாய் நின்ற சோதிப்பிளம்பு.

சிவனுக்குச் சிறப்பான திருமேனிகள் மூன்று. 1. அருவம், 2. அருவுருவம், 3. உருவம். அருவம்: ஊனக்கண்ணுக்குப் புலப்படாதது. அருவுருவம்: கைகால் முதலிய உறுப்புகள் இல்லாததினால் அருவமாகியும், கண்ணாற் பார்க்கும்பொழுதும், கையால் தொடும்போதும் உணரத்தக்க உருவமாகியும் இரு நிலைகளும் விரவப்பெற்றது. உருவம்: கைகால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய உருவத் திருமேனி.

அரு உருவம்:- சிவனுக்கு மட்டும் சிறப்பாக உரியது. நீள் நாகமணிந்தோர்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்.

கையால் தொடமுடியாததும், கண்ணாற் பார்க்கமுடியாததுமான இறைவனை வாழ்த்தி வணங்கும்பொழுதும், நினைக்கும் பொழுதும் இரசிக்க முற்படுவோர்க்கு இலிங்கம் அவனைக் குறிக்கும் அடையாளமாக விளங்குகின்றது.

சிந்தைக்கும் மொழிக்குமெட்டாததும், தோன்றாததும், மறையாததுமான பரம்பொருளைத் தோன்றிவந்ததாகக் கருதுவது மக்கள் போக்காகும். பிறப்பு இறப்புக்களையறிகிறோம். கடவுளைப் பிறக்கும்படி செய்து திருப்தியடைகிறோம். விநாயகக் கடவுளுக்கு அத்தகைய தோற்றங்கள் பிறப்பிக்கப்பட்டுமுள்ளன. புராணங்கள் காரணங்களையும் காட்டுகின்றன.

உலகெலாம் நிறைந்து எங்கும் தானேயாய் பரப்பிரம்மமாய் விளங்கும் சிவபெருமான் சிவபரம் பொருளில் வேறாகாது நெருப்பில் சூடுபோல ஒன்றுபட்டு விளங்குவதே சிவசக்தி. சிவமும் சக்தி

யும் ஆன்மாக்கள்மீது கொண்ட பெருங் கருணையின் பயனாக மக்கள் உய்யும்பொருட்டுத் தோற்றுவிக்கப்பட்டதே விநாயக மூர்த்தம்.

விநாயகன் வேத முதல்வன், கணபதி, ஞானக்கொழுந்து, பிள்ளையார் எனவும் அழைக்கப்படுகிறார்.

ஓங்காரம் (நாதம்). இறைவன் ஒளிவடிவானவன், விநாயகன் (ஒலி) பிரணவ வடிவமான (ஒலி) வன். எல்லாவற்றிற்கும் பிரணவமே மூல ஒலியாகும்.

சிவபெருமானும் விநாயகனும் இரு வேறு தெய்வங்கலில்லை. பரம்பொருளாகிய சிவமும் பிரணவமும் ஒன்றே. பிரணவம் என்பது ப்ர+நவம் எனப் பிரித்துப் பொருள்படு போது ப்ர-விசேடம், நலம்-புதுமை, அனுபவிக்க அனுபவிக்கப் புதுப்புது உண்மைகளை உணர்த்துவது என்பது பொருளாகும்.

ஆண் பெண் யானை வடிவில் அகரமாகிய சிவமும், உகரமாகிய சக்தியும் கூடியதால் சுத்த மாயாகாரியமாகிய நாதப் பிரணவம் (ஒலி) ஓம் வடிவில் தோன்றியதென்றும் இதன் உட்பொருளை வேதங்கள் கூறுகின்றன. ஓம் என்னும் பிரணவ வடிவமான யானைமுகம் ஓங்கார வடிவமுடையது. பல்கலைக்கும் முதலாகப் புகன்றிடுவது ஓம் என்னும் பதமாம். அந்தச் சொல் வினைக்கும் பொருள் அயன் மால் ஈசனெனச் சொல்வார் மேலோர். மல்குமறையுட் பொருளாய் சுடரொளியாய் யோகுடையோர் மனத்தே தோன்றும் அல்கியசீர் பிரணவம். இதை உணர்ந்தவரே வீட்டின்பமடைய வல்லாரெனப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. உலகத் தோற்றங்களுக்கு முதற்காரணம் நாதப்பிரணவம். நாதம்-ஒலிப்பிரணவம் ஓங்காரம். விநாயகப் பெருமானுடைய வடிவம் யானை முகம், ஐந்து கரங்கள், இரு செவிகள், மூன்று கண்கள், பெருவயிறு என்பன உடையன. விலங்காய் மனிதராய், தேவராய், பூதராய் இந்த நான்கு படைப்புக்களின் இணைந்த உருவமாய்த் தோற்றமளிக்கின்றார். இவை யாவும் பொருள் பொதிந்த உருவங்களாகும். விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்துவது பழமையானது. விக்கினங்களை நிகழவொட்டாது தடுப்பதில் திறமை மிக்கவன். கணங்களுக்கெல்லாம் தலைவன் ஆனதால் கணபதி என்ற பெயரையுமுடையான். இந்துசமயத்தின் சௌரம். சைவம், சாக்தம். கௌமாரம், காணாபத்தியம் ஆகிய ஆறு பிரிவுகளிலும் கணபதிக்கு முக்கிய இடமுண்டு.

வி+நாயகன் என்பது தனக்குமேல் தலைவன் இல்லாதவன் என்பது பொருளாகும். விநாயகனுக்குக் கணேசன் என்பதும் ஒரு பெயராகும். இதைப் பிரித்துக் கண்ணே+ஈசன் எனப் பொருள்

கொள்ளின் இரு கண்களின் மையமாம். புருவ நடுவில் சிதாகாயம் வெள்ளிப்பனிபோன்ற அமுதகலசத்தில் உறை சிவச்சுடரைக் கண்ணின் மணிகள் அணைந்து கண்களை மூடப் புறத்தோற்றங்கள் யாவும் மறைந்து இருளும் ஒளியும் விளங்காத நிலையில் மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒருமித்துக் குவிய கருணைகொண்ட சிவப்பிரகாசம் புருவ நடுவில் நின்று பிரகாசிக்கும். கண்ணில் கருணை உண்டு, ஞானம் உண்டு. அதனால் ஆன்மா தன்னிடத்துள்ள மாசுகள் நீங்கிப் பேரறிவுடைமையாகின்றது, ஆராதனையில் காட்டப்படும் தீபஜோதி உள்ளுணர்வில் ஞான ஒளியைச் சேர்ப்பிக்கின்றது. ஆனதால் ஈசன் கண்களோடும் கலந்து கருத்துள் நிறைகின்றான். அதனால் கண்ணே ஈசன் என்பது கணேசன் என்றாயிற்று. ஊழ்வினைகள் அறவேண்டும், வருவினையும் செய்வினைகளும் பலவினைகளும் நீங்கவேண்டும். ஞானம் பொருந்தினால் வினைகள் தாமாக நீங்கும். துன்பம் போகும். இன்பம் பெருகும். விநாயகனின் திருவடிகள் ஞானமாகும். உண்மையறிவே ஞானம்.

பிள்ளையார் தன்னை நினைப்பவர், வழிபடுபவர், தியானிப்பவர் உள்ளங்களில் உறைவார். குற்றங்களை நீக்குபவர், குறைகளைப் போக்குபவர், துன்பதுயரங்களை வரவொட்டாது தடுப்பவர், இடையூறுகள் அச்சம் அபாயம் நேராது காப்பவர். மலங்களின் பிடியிலிருந்தும், புலன்வழித் துன்பங்களிலிருந்தும் விடுவிப்பவர். எந்தச் செயலில் ஈடுபடமுனபும் பிள்ளையாரை வணங்க வேண்டும். அப்போது அவை தடையில்லாது முடிவுறும். செய்யப் போகும் செயல் அறிவுத்திறனுடனும், சிந்தனைக்கூர்மையுடனும் மலங்களாலும் அதன்வழிப் புலன்களாலும் மயக்கப்படாமலிருக்கப் பிள்ளையாரை வணங்கவேண்டும்.

உலகிலே தோன்றிய முதல் ஒலியே ஓம் அந்த ஒலியிலமைந்திருப்பவர் விநாயகன் ஓம் என்னும் பொருளில் உற்றாய் போற்றி என்பது அர்ச்சனை மலர்.

## சிவபெருமானும் விநாயகனும்

சர்வ ஈஸ்பரன்: சிவபரம்பொருள் (சிவபெருமான்) சர்வ சித்திவிநாயகன் - விநாயகப்பெருமான் சிவபெருமான் மூன்று கண்களை உடையவர். பிறைசூடிய பெருமான் விநாயகர்: மூன்று கண்களையுடையவர் பாலச்சந்திர விநாயகன் (இளம்பிறை) விநாயகர் ஐந்து கரங்களையும் ஐந்தொழில்களையுமுடையவர். படைப்புக்களுக்கு முந்திய தோற்றம் உடையவர்.

எல்லாம் வல்ல ஒரு சக்தியே விநாயகப் பெருமான் சிவமும் சக்தியும் சேர்ந்த சிவ சதாக்கியமாகச் சிவலிங்க வடிவத்தையும்

ஓங்கார வடிவமாகிய ஆனைமுகத்தையும் நினைவுபடுத்துகின்றது. நாதம் – சிவம், (ஒளி), பிரணவம் - ஓங்காரம் ஒலி (ஓம்) என்னும் பிரணவப் பொருள் வடிவமாகி அறிவு இச்சைதொழில் என்னும் மூன்று சக்திகளையும் மும்மதங்களாகச் சொரியும் யானையின் திருமுகத்தையுமுடையவராய் விநாயகப் பெருமான் தோன்றியுள்ளார்.

அறிவின் முதிர்ச்சியே ஞானம்,
அறிவை ஊட்டுபவரே விநாயகன்.

## பிள்ளையார் சுளி :

நாதம் தண்டம் விந்து வட்டவடிவம் இவை இரண்டும் சேர்ந்த வடிவம் உ பிள்ளையார் சுளி.

எக்கருமத்தைத் தொடங்கு முன்னும் அக்கருமம் செவ்வனே நிறைவுபெற வினாயகரை வணங்குவதும் எழுதத் தொடங்கும் பொழுது பிள்ளையார் சுளி இடுவதும் மரபாகும். வித்தியாரம்பம் திருமணம், பூசைகள் வீட்டுக் கருமங்கள் ஏர்பூட்டல் முதலிய எக் கருமங்களிலும் பிள்ளையார் பூசை செய்வது வழக்கத்திலுள்ளது.

## முதல்வன் வினாயகன் :

எல்லா மூர்த்திகளிலும் சிறந்தவர் விநாயமூர்த்தி ஓங்கார ரூபன் பிரணவ வடிவானவன் பிரணவப் பொருளைச் சிவபெருமான் முருகனிடம் உபதேசம் கேட்டதாகவும் அவ்வாறே முனிவர்களில் சிறந்த அகத்திய முனிவரும் மானிடர்களில் சிறந்த அருணகிரியும் பிரணவப் பொருளை அறிந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. (எல்லா மூர்த்திகளும் சாபம் பெற்றுள்ளனர்) விஷ்ணு, உமை நான்முகன், ஆதிசேடன், தேவர்கள் முனிவர்கள் ஆகிய எல்லாரும் சாபம் பெற்றுள்ளனர். விநாயகப் பெருமான் திருவருளால் அவை நீங்கவும் பெற்றன எனப் பல புராணங்களும் கூறுகின்றன. பிள்ளையாருக்குச் சாபம் (இட்டால்) யாராலும் எவ்விடங்களிலும் இடப்படவில்லை. (சிவபெருமானும் இறைவனும்) வெருவரு செலவின் வேழ முகத்தனை விதித்த சாபம் பெருவலி தன்னைச் சாரும் பெற்றியால் சாபம் கூறான் என்பதின்படி இறைவனையே சாரும் எனக் கொள்ளப்படுகிற இவற்றின்படி இறைவனும் வினாயகனும் ஒரே பொருளாகிறது. பிரம்மசொருபமாகும் இறைவன் ஒளி, விநாயகன் ஒலி ஆகிய பிரணவப் பொருள் ஆகும். விநாயகர் விரும்பும் நிறம் சிவப்பு.

மலர்கள் - சிவந்த புஷ்பம் மிக விருப்பம். மந்தரைப்பூ, தாமரை, முல்லை, கொன்றை, இருலாச்சி, செருத்தி, செண

பகம், குருத்து மல்லிகை, நொச்சி, குவளை, களாத்தி, செவ்வந்தி, வெள்ளெருக்கு, புண்ணை போன்ற இன்னும் பல பத்திரங்கள் அறுகு, வன்னி, மாசிப்பச்சை, கையான்தகரை வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, மாதுளை, தேவதாரு, அலரி, மருது, விஷ்ணுகிராந்தி, நெல்லி, சிறுசண்பகம். திருவேதனப் பொருட்கள் : தேங்காய், வெல்லம், எள்ளுருண்டை, அப்பம்' அவல், வாழைப்பழம், பனம்பழம், பயறுவகை, கனிவகை, கிழங்கு வகை, இளநீர், தேன், நெய், பச்சரிசி, பாகு, பால், பொரிமா, லட்டு, வடை, விழாம்பழம், நாவற்பழம், என்பன.

**மகாமகம் :**

மாமாங்கம் மகாமகம் என்பதின் திருபுபட்ட பெயராகும். ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத்தின்போது கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் மாமாங்கேஸ்வரருக்கு விழாவும், தீர்த்தோற்சவமும் நடைபெற்றுள்ளது. அதனாலும்போலும் மாசிமகத்தீர்த்தக்கோயில் என்றும் பெயருடையதாக இருந்தது. 12 வருடங்களுக்கொருமுறை வரும் மகாமகத்திலும் மிகச் சிறப்பாகத் தீர்த்தோற்சவம் கொண்டாடப்பட்டது. தற்போது பலகாலமாக நடைபெற்றதாகவோ நடைபெறுவதாகவோ இல்லை. காரணம் தெரியவில்லை.

புதிய நிர்வாகத்தினரின் முயற்சியினால் 96ஆம் ஆண்டு மாசி மகத்திலன்று மீண்டும் சிறப்பாக நடைபெற்றது மேலும ஒவ்வொரு வருடங்களிலும் முன்னையபோல நடைபெவேண்டும் என்று நிாவாகத்தினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள கும்பகோணத்தில் திருக்குடந்தை என்னும் தலத்தில் இதுபோன்ற ஒந குளம் உண்டு. அதன் தொடர்புகள் மாமாங்கக் குளத்திலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. மகாமகக் குளம் 20 ஏக்கர் பரப்புடையது. குளத்தினுள்ளே ஒன்பது கிணறுகள் வடிவத்தில் நவதீர்த்தங்கங்களுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் மாசி மகத்தின்போது இந்நகரில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் கும்பேஸ்வரருக்கு விழா எடுக்கப்படுகிறது.

மாசிமகத்தில் குரு சிம்மராசியிலும் சந்திரன் கும்பராசியிலும் சஞ்சரிப்பதால் அப்புண்ணிய காலத்தில் தீர்த்தோர்ச்சவம் நடைபெறுகின்றது. இங்கு தீர்த்தமாடுவது மிகவும் சிறப்பாகக் கருதப்படுகின்றது. இதைவிட 12 வருடங்களுக்கு ஒருமுறை வரும் மாகமகம் விழாவும் தீர்த்தோர்ச்சவமும் சிறப்பாகவும் விசேடமாகவும் இங்கு நடைபெற்று வருகின்றது. அக்குளத்தில் நிலைகொண்டிருக்கும் நவதீர்த்தங்களின் தேவதைகளான கங்கை, யமுனை, கோதா

வரி, நறுமதை, சரசுவதி, காவேரி, குமரி, பயோஷினி, சரயு ஆகிய ஒன்பது கன்னியரும் அந்தவேளை அந்தக் குளத்தில் பிர சன்னமாகி இருப்பார்களாம் பாவிகள் வந்து தங்களில் நீராடுவதி னால் பற்றும் பாவங்களிலிருந்து விடுதலைபெற அந்தத் தேவதை களும் அந்தப் புண்ணிய நேரத்தில் அங்குவந்து நீராடுகின்றனர் என்பது ஐதீகம். இதைக் குறிக்கும் பா ஒன்று: பூமருவு கங்கைமுதல் புனிதமாம நதிபலவும்.

மாகந்தான் ஆடுதற்கு வந்து வழிபடும் கோயில் எனச் சிறப் பித்துப் பாடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட தீர்த்தோர்ச்சவத்தன்று இந்தியாவின் தமிழகத்திலுள்ள பல இடங்களிலுமிருந்து ஆயிரமா யிரமாகப் பக்தர்கள் வந்து கூடித் தீர்த்தமாடிப் பாவங்களைப் போக்கிப் புண்ணியந் தேடிச் செல்கின்றனர். இத்தீர்த்தத் தலத் தைச் சூழ உள்ள ஒரு பகுதி அமிர்தவல்லி என்பது அது இங்கு அமிர்தசழி என வழங்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. மகா மகக் குளத்திலிருந்து அதன் தொடர்புகள் அனுமனின் பக்தியால் மாமாங்கக் குளத்துக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது என்ற ஐதீகமுடையது.

## கும்பகோணம் :

கும்பகோணம் குடந்தை எனவும் பெயர்பெறும். குடந்தைத் தல புராண வரலாற்றின்படி பிரம்ம பிரளய காலத்தில் (ஊழிக் காலம்) உலகங்களெல்லாம் அழிந்துவிடும் என்று கவலை கொண் டான் பிரமன். உலகை மீண்டும் படைப்பதற்கு இறைவனுடைய திருவருளை அறியவும் பாதுகாக்கத் தெரிந்துகொள்ளவும் அவரி டம் சென்று முறையிட்டான். அவர் படைப்புக்குரிய வித்தையும் பாதுகாக்கும் முறையினையும் திருவாய் மலர்ந்தருளினார். அவர் கூறியபடி பிரம்மதேவன் அமிர்தத்தையும் நீரையுங் கலந்து மண் ணைப் பிசைந்து குடம் ஒன்றை ஆக்கினார். அதை நூல் மாவிலை தேங்காய் தருப்பை வஸ்திரம் முதலியவற்றால் அலங்கரித்துக் கும்பமாக்கி வில்வத்தால் அர்ச்சித்து சிருஷ்டி பீசத்தை அதனுள் வைத்து உறியிற்கட்டி மகாமேரு மலையில் உயரத்தூக்கி வைத் தார். ஊழிக்காலம் வந்தது. அக்கும்பத்தை வெள்ளம் அடித்துக் கொண்டு சென்றது. வெள்ளம் வற்றியபின் அக்கும்பம் தென்னாட் டில் ஒரு இடத்தில் தங்கியிருந்தது. அது தங்கியிருந்த இடமே கும்பகோணமாகும். தேங்காய், மாவிலை, தாப்பை மற்றும் கும் பத்திலுள்ள பொருட்களெல்லாம் சிதறி மரங்களாகவும் வேறு வேறு பொருட்களாகவும் மாறின சிவபெருமான் வேட உருவில் வந்து குடத்தைக் கழுத்தளவாய் உடைக்க அதிலிருந்த அமுதம் ஐந்து குரோச தூரம் பரவின. பின் கும்பத்தின் மண்ணைப் பிசைந்து

ஒரு உருவாக்கி அதனுள் தன் தேஜஸைப் புகுத்தினார். அன்று முதல் அம்மூர்த்தி அமுதகும்பேசர் என்று பெயர் பெற்றார்.

கும்பத்திலிருந்து பரவிய அமுதநீர் இருபெரும் வாவிகளாகத் தேங்கின. ஒன்று மகாமகக் குளம் மற்றது பொற்றாமரைக் குளம் இக்குளங்கள் அமிர்தம் கலந்த தீர்த்தங்களாயின. மகாமகக்குளத் தின் தீர்த்தம் மாமாங்கக குளத்திலும் பல தொடர்புகளால் கலந் துள்ளதாகக் கூறப்படுகிறது.

மகாமகக் குளத் தீர்த்தச் சிறப்புக்கு மற்றுமொரு காரண மும் சொல்லப்படுகிறது. நவ நதிகளாகிய ஒன்பது கன்னியர்களும் சிவபெருமானிடம் சென்று எம்பெருமானே உலகத்து மக்கள் பல காலமாக வந்து எங்களிடத்து நீராடித் தங்கள் பாவங்களைப் போக்கிப் பரிசுத்தராகிச் செல்கின்றனர். அதனால் அவர்களின் மாசுக்கள் எங்களிற் படிந்து நாங்கள் குற்றமடைகின்றோம். எங்கள் கறைகளைப் போக்க வழிகாட்டியருளவேண்டுமெனப் பிரார்த்தித் தனர்.

பெருமான் அதைக்கேட்டு நீங்கள் வருந்தவேண்டாம், காசிக்கு வாருங்கள், அங்கிருந்து தென்னாட்டிற்குப்போய் அங்குள்ள தீர்த்தமொன்றில் உங்களை நீராடச் செய்கின்றேன் அப்பொழுது உங்களில் படிந்துள்ள மாசுகள் நீங்கும் என்று அருளினார். அதன் படி அந்த நவ கன்னியரும் காசிக்குச் சென்றனர். விஸ்வநாத மூர்த்தியும் பரிவாரங்களுடனும் நவகன்னியருடன் கும்பகோணத் திலுள்ள மகாமகக் குளத்தையடைந்தனர். அவர் அதன் வடபால் கோயில்கொண்டருளியிருக்க அவராணைப்படி நவ கன்னியரும் அதில் தீர்த்தமாடினர். தீர்த்தமாடிய தினம் மாசி மாதமும் மக நட்சத்திரமும் பூரணையும் வியாழன் கும்பராசியிலும் பொருந்தின நாள். அத்தினம் பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை வருகின்ற படியால் மகாமகம் என மகத்துவம் பெற்றது. மகாமகத்தன்று மகாமகக் குளத்தில் பல புண்ணிய தீர்த்தங்கள் வந்து கலக்கின் றன என்பது ஐதீகம். அப் புண்ணிய தீர்த்தத்தில், அப் புண்ணிய காலத்தில் தீர்த்த ஸ்தானஞ் செய்தால் பல புண்ணிய தீர்த்தங் களில் தீர்த்தமாடிய பலன் கிடைக்கும். பாவ வினைகளும் நீங்கு மென்ற நம்பிக்கையும் மக்களுக்குண்டு.

12 வருடத்துக்கொருமுறை வரும் மகாமகத்தன்று இந்தியா வின் பல இடங்களிலிருந்தும் கோடான கோடி மக்கள் வந்து நீரா டிச் செல்கின்றனர். மகாமகக குளம் அமிர்தம் கலந்தது. இதன் தொடர்புகள் மாமாங்கக் குளத்திலுமிருப்பதால் இக்குளமும் சிறப் பும் வல்லமைகளுமுடையதாக மதிக்கப்படுகிறது. வருடத்துக்கொரு முறை வரும் மாசி மகத்தன்று இங்கு முன்பெல்லாம் தீர்த்தம்

நடந்ததாக அறியக் கிடக்கிறது. தற்போது நடைபெறுவது இல்லை. 12 வருடத்துக்கொருமுறை வரும் மகாமகத் தீர்த்தம் மட்டும் நடத்தப்படுகிறது. ஒருநாள் திருவிழாவும் தீர்த்தோற்சவமுமாக.

**மாசி மகம் :**

மாசி மாதத்தில் மக நட்சத்திரம் பூரணையோடு கூடிவருவதால் அத்தினம் மிக விசேடமுடையது தை அமாவாசை ஆடி அமாவாசை, அர்த்தோதயம், மகோதயம், மாசி மகம் ஆகிய புண்ணிய தினங்களில் புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்வது மிக விசேடமாகக் கருதப்படுகிறது.

மாமாங்கமாடி மதுரைக் கடலாடி ஸ்ரீரங்கமாடி திருப்பாற் கடலாடி எனவும் பாடல் பகுதி ஒன்று உளது.

பிறவிக் கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் அமிழ்ந்தி வருந்தும் உலக மக்களை இறைவன் அவற்றினின்றும் எடுத்து அருட்கடலில் இன்பவெள்ளத்திலமிழ்த்தி திளைக்கச் செய்யும் திருவருட் குறிப்பையே தீர்த்தவாரி என்னும் சிறப்பு நிகழ்ச்சி உணர்த்துகின்றது. இறைவனை ஒரு வகையில் கடல் என்றும் தீர்த்தம் என்றும் உருவகஞ் செய்து பெரியோர்கள் போற்றுகின்றனர்.

உருகிப் பெருகி உள்ளம் குளிர முகந்துகொண்டு பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடல் என்றும் மரணம் பிறப்பென்று இவையிரண்டின் மயக்கறுத்த கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பி என்றும் மணிவாசகர் பாடியுள்ளார்.

இறைவனைத் தீர்த்தம் எனவும் தீர்த்தன் எனவும் போற்றிக் குறிப்பிட்டு ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன் எனவும் கூறுகின்றார். விக்கிரம சோழன் மாசி மாத மகநட்சத்திரத்தில் வரும் பௌர்ணமித் தினத்தன்று கடலாட்டு விழா நடத்திக் கடற்கரையில் ஒரு மண்டபமுமைத்து அதில் இறைவனை எழுந்தருளப் பண்ணி வழிபட்டு மகிழ்ந்தான் என பின்வரும் கல்வெட்டுப் பாடல் உணர்த்துகின்றது.

மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும் பேசுற்ற அற்றைப் பெருவழியும் ஈசற்கு அமைத்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

**தீர்த்தங்கள் பொது :**

சைவசமயத்திலே ஆன்ம ஈடேற்றத்திற்காக 1. மூர்த்தி வழிபாடு 2. தலயாத்திரை 3. தீர்த்தஸ்தானஞ் செய்தல் என்ற மூன்று கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன.

1. மூர்த்திகளில் தெய்வீக சாந்நிதித்தியம் மிக்குண்டு.
2. தலங்களில் தெய்வீக அருட்சக்தி நிரம்பி உண்டு.
3. தீர்த்தங்களில் தெய்வீக அருள் பரவிப் பரந்துண்டு.

பெரியார்களின் வாசத்தாலும் சேர்க்கையாலும் அவர்கள் தெய்வீக வாழ்க்கை வாழ்ந்தாலும் தெய்வத் திருவருளால் தமது இஷ்ட சித்திகளைப் பெற்றதாலும் அவர்கள் பரிசம் காலடிகள் பதிக்கப்பட்டதாலும், அத்தீர்த்தங்களில் நீராடியதாலும் தலங்களும் தீர்த்தங்களும் மகிமைபெற்றுள்ளன.

ரிஷிகள் தாங்கள் செய்த தவங்களின் பலனை மக்களுக்குக் கொடுத்த இடங்களே கோயில்களும் தீர்த்தங்களுமாகும். தவம் செய்யச் சக்தியில்லாதவர்களும் பாவங்களைத் தொலைக்க வருபவர்களும் கோயில்களுக்கு யாத்திரை செய்வதாலும் இத்தீர்த்தங்களில் மூழ்குவதாலும் தாங்கள் புனிதமடைவதுடன் மிகவும் புண்ணிய சாலிகளாகவும் ஆகின்றனர்.

தீர்த்தமென்பது தண்ணீர் மட்டுமல்ல, தோய்வதால் உடவழுக்கை மட்டும் போக்காது அத்தீர்த்தங்களில் கலந்து உயிராக இருக்கும் தீர்த்த தேவதைகள் ஊழ்வினைகளையும் பாவங்களையும் ஜென்ம வினைகளையும் போக்கவல்லன. தீர்த்தங்கள் குளமாகவோ ஆறாகவோ கடலாகவோ இருக்கலாம். அவை ஆலயங்களை அண்டியே உள்ளன. தீர்த்தங்களில் நீராடுவது பாவங்களைப் போக்குமெனவும் மருத்துவப்பயன் உள்ளதால் நோய்களை நீக்குமெனவும் சாப விமோசனங்களைத் தீர்க்குமெனவும் கருதப்படுகிறது. முதலில் இவற்றின் பயன்களைக் கூறுவர். பயன்கருதி யாத்திரை செய்து தீர்த்தமாடுவோர் அவற்றின் பயன்களைக் காலவரையில் அடைவர். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே எனத் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

பகீரதன் என்னும் அரசன் தம் முன்னோரான சகரச்சக்கரவர்த்தியும் அவரின் புத்திரர்களும் கபிலமுனிவரின் சாபத்தினால் நரகத்திலழுந்திக் கொண்டிருப்பதையறிந்தான். ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து அவர்கள் சாம்பரில் சேர்ப்பதால் விமோசனமடைவர் என்பதையும் கேள்வியுற்றான். அனேக காலம் கடுந் தவம்புரிந்து ஆகாயகங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து அவர்கள் சாம்பரில் பாயவிட்டு சாப விமோசனம் பெற்று பரகதியடையச் செய்தான் என்பது முன்னைய வரலாறாகும்.

பாரத வரலாற்றிலும் அரிச்சுனன் தான் செய்த பழி பாவம் குற்றம் குறைகள் நீங்கத் தல யாத்திரை தீர்த்த யாத்திரைகள் செய்ததாகக் கூறப்படுகின்றது. இந்தியாவிலே கங்கை, யமுனை,

காவேரி, சிந்து, நர்மதை, சரஸ்வதி, குமாரி, தாமிரபரணி, துங்கபத்திரை, சேது முதலிய தூய நதிகளில் புண்ணிய காலங்களில் நீராடுகின்றனர்.

இலங்கையிலும் பல புண்ணிய ஆலயங்களும் தீர்த்தங்களுமுண்டு யாழ்ப்பாணத்திலே கீரிமலையில் நகுல தீர்த்தம் நகுல முனிவரின் சாபம் நீங்கியதோடு கீரிமுகமும் மாறியது மாவிட்டபுரம் — மாருதப்புரவீக வல்லிகின் குதிரை முகம் மாறியது திருகோணமலை - பாபநாசச்சுனை தாயைப் புணர்ந்தவனின் கொடிய பாவத்தை நீக்கியது. தன் தாயைப் புணர்ந்த ஒருவன் தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் தேடினான். முனிவரொருவர் இரங்கி அவன் உடையில் முடிச்சு ஒன்றைப் போட்டு புண்ணிய தீர்த்தங்களில் ஆடிவரும்போது அம்முடிச்சு அவிழும் இடமே பாவ விமோசனம் ஆகும் எனவும் கூறினார். அவன் அவ்வாறு இந்தியாவில் பல தீர்த்தங்களில் ஆடினான். முடிச்சு அவிழவில்லை. முடிவில் திருகோணமலைக்கு வந்து கோணேஸ்வரரையும் மாதுமையாளையும் வணங்கி அங்கிருந்த பாபநாசச்சுனையில் நீராடினான் அப்பொழுது அவனுடைய உடையில் இருந்த முடிச்சி அவிழ்ந்தது. பாவவினையும் நீங்கியது என்பதை உணர்ந்து பெருமகிழ்வெய்திச் சென்றான் என்றும் ஒரு வரலாறு. திருகோணமலையில் கன்னியா என்ற இடத்தில் இலங்கையை ஆண்ட இராவணேஸ்வரன் இறந்த தன் தாயின் இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு ஏழு கிணறுகளை ஒரே இடத்திலமைத்து நீராடினான். அவை ஒரே இடத்திலமைந்திருந்தாலும் வேறு வேறான தன்மைகளையுடையனவாய் இருந்தன. இருக்கின்றன. இன்றும் அங்கு அவற்றைக் காணலாம். பலர் அங்கும் சென்று நீராடுகின்றனர்.

### மாமாங்கத் தீர்த்தம்:

கிழக்கிலங்கையில் மிக்க பிரசித்திபெற்ற தீர்த்தக்குளமாகும். குஷ்டம், குன்மம், ஜென்ம வினைகள், பிரமகத்தி தோஷங்களை நீக்கிய வல்லமை உடையது.

மட்டக்களப்புப் பகுதிகளில் முன்பு சிலகாலம் வாழ்ந்த சித்தானைக் குட்டிச் சுவாமிகள் திருகோணமலையிலுள்ள பாபநாசச்சுனையிலிருந்து தீர்த்தம் கொணர்ந்து மாமாங்கக் குளத்தில் கலந்து நீராடினார். யாழ் / துன்னாலையிலிருந்து வந்த தொழுநோயாளரொருவரும் இங்கு வந்து நீராடித் தொழுநோய் நீங்கினாரெனக் கூறுகின்றனர். மண்முனை முருகேசு என்பவர் பித்த நோய் நீங்கினார். ஆடகசவுந்தரியின் அவலட்சணமான தோற்றம் முலைத்தடம் கழுத்திலிருந்த மச்சம் என்பனவும் ஜென்ம வினைகளும் நீங்கியது. ஸ்ரீ இராமபிரானின் பிரமகத்தி (இராவண சங்காரம்) தோஷம் நீங்கியது.

மற்றும் திருக்கேதீச்சுரம் - பாலாவித்தீர்த்தம் முனீஸ்வரம் - சிவ தீர்த்தம் என்பனவும் புண்ணிய தீர்த்தங்களாக விளங்குகின்றன.

ஒவ்வொரு வருடமும் இத்தலங்களில் வரும் புண்ணிய தினங்களிலே அங்கு சென்று தீர்த்தமாடி வருவோர் விசேட பலன்களையும் பேறுகளையும் அடைவர்.

புண்ணிய தீர்த்தங்கள் பொருந்தி ஆடினோர்
விண்ணிடைக் கடவுளாகிய மேவுவார்

எனவும் தீர்த்தங்களின் மகிமை சிறப்பித்துக் கூறப்படுகிறது. ஈழ நாட்டில் தீர்த்தங்கள் பலவாயினும் மட்டக்களப்பிலுள்ள மாமாங்கத் தீர்த்தமும் யாழ் / மாவிட்புர கீரிமலைத் தீர்த்தமும் மிக விசேடனானவையாகக் கருதப்படுகின்றன.

போராதனில் வென்று நின்ற ராமன்கொண்ட
பிரமகத்தி தோஷமது நீங்கும் வண்ணம்
பாரதமே சென்று பல தீர்த்தங்கொண்டு
பாங்கான அமிர்தநதிக் குளமும் தொட்ட
தெங்கு செறி அமிர்தகழிப்பதியின் ஓர்பால்
தீராத நோய் தீர்க்கும் தீர்த்தம்

எனவும் பாடல் பெற்றது.

## ஸ்ரீ இராமபிரானும் பிரமகத்தி தோஷமும் :

ஒரு உயிரைக் கொலைசெய்வதால் ஏற்படும் குற்றமும் பாவமும் பிரமகத்தி தோஷம் எனப்படும். அது பின்புறமாகக் கண்களுக்குத் தெரியாது. மறைந்து சூக்குமமாக நின்று அவ்வுயிரையும் உடலையும் தொடர்ந்துகொண்டிருக்கும். சிவலிங்கம் இருக்கும் இடங்களில் மட்டும் குறிப்பிட்ட தூரத்துக்கு விலகி நிற்கும். மீளும்போது மீண்டும் பற்றிப் பிடித்துக்கொள்ளும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிறப்பால் பிராமணனாகிய இராவணனைச் ஸ்ரீ இராமபிரான் கொன்றதினால் அவரைப் பிரமகத்தி தோஷம் பிடித்துக்கொண்டது. இதை அவர் அறிந்தாரில்லை. மீண்டும் இந்தியாவுக்குச் செல்லும் வழியில் சோதிமயமான முனீஸ்பரர் ஆலயத்தைச் சமீபித்தார். தம்மை ஒரு மறைமுகமான சக்தி விலகிச்செல்வதை அறிந்தார். பின் ஸ்ரீ இராமபிரானும் சீதையும் உடன் சென்றவர்களும் அங்குள்ள சிவ தீர்த்தத்தில் நீராடித் திருக்கோயிலுட் சென்று வடிவாம்பிகை சமேத முன்னை நாதஈஸ்பரரை வணங்கினர். ஆலதைவிட்டு மீண்டபோது அச்சக்தி ஸ்ரீ இராமபிரானைப் பிடித்துக் கொண்டதையும் அறிந்தார். இதுபற்றி கூடச்சென்ற பெரியார்

களிடம் வினவினார். இராவணனைக் கொண்டதால் உண்டான பிரமகத்தி தோஷம் எனவும் சிவபூசையே பிரமகத்தி தோஷத்தை நீக்குமெனவும் கூறினார். தம்மைப் பிடித்த பிரமகத்தியை நீக்க வழிதேடினார். இந்தியா செல்லும் வழியில் இராமேஸ்வரத்தில் ஒரு சிவலிங்கத்தை அமைத்து அருகிலுள்ள தனுஷ் கோயிலில் தனது தனுவை ஊன்றி நீரைப்பெற்று அபிசேகித்து தன்னைப் பீடித்த பிரமகத்தி தோஷம் நீங்கப்பெற்றார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**மஹாளய பட்சம்:**

புரட்டாதி மாசம் அமவாசையும் அதற்கு முன் உள்ள பதினைந்து நாட்களும் கொண்ட பட்சகாலம் தேவர்கள் காலக் கணக்கின்படி அவர்களுக்கு நடு இரவாகும். அமைதியான நேரம். இக்காலங்களில் பிதுரர்களுக்குக் கடமை செய்வோர் தங்கள் தாயார் தந்தையர் இறந்த திதியிலே அல்லது அப்பட்ச அமாவாசையிலோ விரதமிருந்து பிதுர்தர்ப்பணம் செய்து சாதுக்கள் ஏழைகளுக்கு உணவு கொடுத்தால் பிதுரர் பிரீதுகொண்டு தம் மக்களை ஆசீர்வதிப்பார்கள். இது செய்யவேண்டியது இல்லறத்தாரின் நல்லறங்களில் ஒன்றாகும். தென்புலத்தார் தெய்வ விருந்தோக்கல் என்பது வள்ளுவர் வாக்கு.

மஹாளம் என்ற சொல்லுக்கு பெரிய இருப்பிடம் அல்லது சந்தோஷமான காலம் என்பது பொருள். மகான்களாகிய பித்துருக்கள் பூமியில் வந்து தங்கி நம்முடன் இருக்கின்றனர். அவர்களுக்கு இந்தக் காலம் இருப்பிடமானதால் மஹாளயம் என்ற அர்த்தம் பொருந்தும். சூரியன் கன்னிராசியில் புகுந்தபோது ஆஷாடம் முதலான ஐந்தாவது அமர பக்ஷம்வரை யமதர்மராஜன் தன்னிடமுள்ள பித்துருக்களைப் பூமிக்குச் செல்லும்படி உத்தரவிடுகிறார். பித்துருக்கள் வந்த அந்த 16 நாட்களுமே மஹாளய விதிப்படி அன்ன சிரார்த்தஞ் செய்யவேண்டும், அல்லது ஹிரண்ய சிரார்த்தமாவது ஒருநாள் மட்டும் செய்யலாம். இதன் பயன்களைத் தர்மசாத்திரம் கூறுகின்றது.

நாம் சௌக்கியமாக வாழவேண்டுமானால் பித்துருக்களைத் திருத்திசெய்யவேண்டும். அவர்களைத் திருத்தி செய்வதற்காகவே சிரார்த்தம் செய்யவேண்டும். சிரத்தையாகச் செயற்படுவதனாலேயே சிரார்த்தம் எனப்பட்டது.

சிரத்தையில்லாதவன் தேவர்களுக்கு நிவேதனம் அளிக்கத் தகுதியில்லாதவன். சிரத்தையுடன் எக்காரியம் செய்தாலும் அது

வேள்விதான். அதுதான் தருமம். மனிதனே சிரத்தையின் உருவம். எவனுக்கு எவ்விதமான சிரத்தையிருக்கிறதோ அவ்விதமே அவன் உருவெடுக்கிறான். வீட்டுமர் தருமருக்குச் செய்த உபதேசத்தில் சமபுத்தியைக்கொண்டு சிரத்தையுடன் எக்காரியஞ் செய்தாலும் அது வேளவிதான். அதுதான் தருமம் என்று அறிவுறுத்தியுள்ளார்.

பித்துருக்களுக்கு நமது ஒருவருடம் ஒருநாள். அவர்களுக்குச் செய்யும் சிரார்த்தம் தினம் உணவு கொடுப்பதுபோலாகும். அமாவாசையில் எள்ளும் தண்ணீரும் இறைத்துத் தர்ப்பணம் செய்வது அவர்கள் தாகத்துக்குத் தண்ணீர் தருவதுபோலாகும். எல்லாப் பித்துரு தேவதைகளையும் திருப்தி செய்ய வேமாளய பட்சம் செய்யப்படுகிறது.

கிழக்குமாகாணத்தில் பல ஆலயங்கள் இருந்தாலும் மஹாளபட்ச பிதுர்கடன் மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் பூசைகட்டிச் சிறப்பாகச் செய்யப்பட்டுவருகிறது. வீடுகளிலும் செய்கின்றனர்.

## ஆடி அமாவாசை:

ஆடி அமாவாசை என்று சொன்னாலே மட்டக்களப்புத் தமிழகத்து மக்கள் அனைவரினதும் கருத்திலும் நினைப்பிலும் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் திருத்தலத்தையே முதலில் நினைவிற்குக் கொண்டுவரும். அவ்வளவுதூரம் ஆடி அமாவாசைத் தீர்த்தச் சிறப்புக்குப் பேர்போன தலமாக இப்பகுதியில் விளங்கும் பெருமை இதற்கு உண்டு. மட்டக்களப்பு மாநிலத்தின் சகல பகுதிகளிலுமிருந்து ஏராளமான மக்கள் ஒருமித்துக் கூடும் இடமாகவும் உள்ளது. மக்கள் பிதுர்க்கடன் கழிக்க ஆடி அமாவாசைத் தினத்துக்கு முன் கூட்டியே வந்து சேருகின்ற ஆடி அமாவாசைத் தினம் சூரியனும் சந்திரனும் சேர்ந்து ஒரேநாளில் கூடும் காலம். பிதுர்காரகன் சூரியன், மாதுருகாரகன் சந்திரன். இதனால் அமாவாசை பூரனைத் தினங்களில் பிதா மாதாக்களை இழந்தவர்கள் விரதமாகக்கொள்வர். தேவகாலக் கணக்கின்படி ஆடி அமாவாசைத் தினம் சாயரட்சை ஆகும். இக்காலம் பிதுர் தேவதைகள் வழிபாட்டுக்குரிய உகந்த காலமாகும். அக்காலத்தில் விசேட புண்ணிய தீர்த்தங்

களை நாடித் தீர்த்தமாடி ஆலய தரிசனம், பிதுர் தர்ப்பணம் முதலியன செய்து இயன்ற அளவு அன்னதானம் வழங்கிப் பிதுர்க் கடன்களை நிறைவேற்றவேண்டும். இதனால் இறந்த பிதா மாதாக்கள், சந்ததியினர் நற்கதி பெறுவரெனப் புராணங்கள் கூறுகின்றன. புரட்டாதி மாத மஹாளய பச்சகாலம் முழுவதும் பிதுர்க் கடன் கழிக்க உகந்த காலம். அந்த முழுப் பலனையும் ஆடி

அமாவாசையிலன்று விரதமிருந்து, தீர்த்தமாடி, ஆலய தரிசனம், பிதுர் தர்ப்பணம் என்பன செய்வதால் பெறலாம் என்றும், இறந்தவர்களின் சாதக ஓலைகளைத் தீர்த்தத்தில் கிழித்துப் போட்டு விடுவதினால் மோட்ச சித்திகளையடைவரென்றும், அதை மாமாங்கத் தீர்த்தக்குளத்தில் அன்று கிழித்துப் போடுகின்றனர். இவை மட்டுமன்றிச் சந்நியாசிகள் துறவு பூணும்போதும் முடிவில் தமக்குத் தாமே இறுதிக் கடன்களை இத்தீர்த்தத்தில் நீராடி நிறைவேற்றுகின்றனர். ஆடி அமாவாசைத் தினத்தில் இக்குளத்தில் தீர்த்தமாடுவதினால் பிற்சந்ததி பெறாதோரும் சந்ததி பெறுவர். ஆறு அல்லது பன்னிரெண்டு ஆண்டுகள் தொடர்ந்தும் தீர்த்தமாடுவோர் வேண்டிய சித்திகளையும் பெறுகின்றனர் எனக் கூறுகின்றனர். இவ்வாறு இம்மைக்கும் மறுமைக்கும் நற்பயன் அளிக்கவல்ல திருக்குளம் இப்பகுதியிலுள்ள சைவ மக்களால் மட்டுமன்றி ஏனைய சமூகத்தவராலும் மிக்க பரிசுத்தமானதொன்றாக மதிக்கப்படுகிறது.

## மகோற்சவம் - ஆடி அமாவாசை :

திருவிழா நடைபெறுங் காலங்களில் நாட்டின் பல பக்கங்களிலுமிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்குவந்து கூடுகின்றனர். அக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் ஆலயச் சூழலில் உள்ள சுற்று வீதிகளெங்கும் பலவிதமான கடைத்தொகுதிகள் அணிசெய்து விளங்கும். தேனீர், மிட்டாய், பழங்கள், வெண்கல அல்மீனியப் பொருட்கள், விளையாட்டுச் சாமான்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், சட்டிபானை, பெட்டி, சுளகு, பாய்கள், மரக்கறிவகைகள் என்பன அணியணியாகக் காணப்படும். வருவோர் போவோர் தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்கிச்செல்வர். வெறுங்கையோடு போகாது பலவித சாமான்களையும் கைகளில் காணலாம்.

உற்சவம் தொடங்கிய நாள்முதல் தீர்த்தோற்சவம் முடியவுள்ள நாட்கள் வரை மக்கள் திரள் திரளாகவும், அணியணியாகவும், ஆண்கள் பெண்கள் பிள்ளைகள் எல்லோரும் வந்துபோய்க் கொண்டுமிருப்பர்.

மாமாங்கப்பிள்ளையாருக்கு அரோகரா என்ற பக்தி ஒலி ஆலய மருங்கெல்லாம் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

## காவடிகள் :

பல பக்கங்களிலிருந்தும் காவடிகள் ஆலயத்துக்கு வந்து கொண்டேயிருக்கும். வெள்ளியினாற் செய்தலகு வாயிற் குத்தி

விலாவிரண்டும் விறுவிறுக்க முள்ளும் போட்டுப் புள்ளிமயிற் காவடியைத் தோளில் வைத்து புண்ணாக மேனியெல்லாம் நோக உள்ளமெல்லாம் நின்னடியை நினைத்து விம்ம உதிரமெல்லாம் மிகத் துடித்தேனையா எனப் பாடிக் காவடிகள் கூட்டமாகவும் தனித் தனியாகவும் பாடியும் ஆடியும் வரும். தொடர்ந்துய சுற்றத்தவரோடும் அயலவரோடும் மேளதாள வாத்தியங்கள் ஒலிக்கவும் வரும். பெண்களும் தலைமுழுகி, வாயில் அலகு குத்தித் தோளில் காவடியுடன் ஆடிவருவர்.

## கர்ப்பூரச்சட்டி :

வேப்பம்பத்திரக் கட்டு கைக்கொண்டு, திருநீறும் சந்தணமும் உடலில் பூசி, தீச்சட்டிதனைத் தூக்கித் தலையில் வைத்து, உருவேறி உனைச்சுத்தும் ஒருகோடி அடியாரில் ஒருவனானேன் எனக் கற்பூரச்சட்டி எடுப்போர் பாடிவருவர்.

## பாற்காவடி :

பால் நிறைந்த காவடியைத் தூக்கித் தோளில் பக்தியுடன் வைத்தபடி வீதி எங்கும் பாலகர்கள் பவனிவரும் காட்சிகள் பார்ப்போரைப் பரவசமடையச்செய்யும்.

அங்கப்பிரதட்சம் செய்வோர் காவித்துண்டை அரையிற் கட்டி முழுக்குப்போட்டு, தேங்காயைத் தலையில் வைத்துப் பிடித்தபடி ஆலயத்தை உருண்டு உருண்டு வலம்வந்து தேங்காயைக் கல்லில் உடைப்பர். உடைக்கப்படும் தேங்காய் சிறு மலைபோல் குவியலாகக் காட்சி அளிக்கும். தங்கள் தங்கள் நேர்கடன்களை நிறைவேற்றுவதில் மக்கள் ஈடுபட்டுக்கொண்டிருப்பர். பக்தர்கள் வாயிலிருந்து தோத்திரப் பாடல்கள், காவடிப் பாடல்கள், கும்மி அம்மானைப் பாடல்களும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். (தேடியுனைத் துதித்தாலே பக்தியோடு பாவவினை எல்லாமே பறந்துபோகும்.)

மாமாங்கப்பிள்ளையாரின் மகிமையினையும் சிறப்பினையும் வெளிப்படுத்தும் பாடல்கள் இப்பகுதிகளில் வாழ்ந்த கவிஞர், புலவோர், அறிஞர்களாலும் பாடப்பட்டுள்ளன. அவை பல ஏட்டுப்பிரதிகளாக இருந்ததினாலும், ஒழுங்காகப் பேணப்படாததினாலும் மறைந்து அழிந்து ஒழிந்தன.

நீறணிந்து பொட்டுமிட்டு புகழ்மாலை சூடிக் கும்பிட வந்தார் குறைபல சொல்லி நம்பி நடந்தார் நலம்பல செய்தாய்.

## வருடாந்த மகோற்சவம் :

வருடந்தோறும் வருகின்ற ஆடி அமாவாசைக்கு முன் உள்ள 9 நாட்களும், ஆடி அமாவாசை 10ஆம் நாளும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவெய்தும்.

வருடாந்த மகோற்சவம் ஆரம்பத்தில் ஒருநாளாக இருந்தது. பின் திருவிழாக்களும் தீர்த்தோற்சவமும் ஐந்து நாட்களாக அதிகரிக்கப்பட்டது. சமயப் பெரியோர்களால் ஆகமத்தையொட்டிப் பத்து நாட்களாக மாற்றம் செய்யப்பட்டது.

உற்சவம் என்பது மேலான ஞானத்தையும், போக மோட்சங்களையும் கொடுப்பது என ஆகமங்கள் கூறுகின்றன. எம்பெருமானுடைய ஐந்தொழில்களையும் திருவிழாக்கள் வெளியிடுகின்றன. கொடியேற்றம் வரையுள்ள கிரியைகள் படைத்தலையும், வாகனத் திருவிழா காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், மௌன உற்சவம் மறைத்தலையும், தீர்த்தோற்சவம் அருளலையும் குறிக்கின்றன. ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் தேர் இல்லாததினால் தேர்த் திருவிழா நடைபெறுவதில்லை. இதை இவ்வளவுகாலமும் நிறைவுசெய்ய இதற்கு முன்பு இருந்த ஆலய நிர்வாகம் முயற்சி செய்யவில்லை. பூசை முறைகள் யாவும் (ஆலய) பிராமண(க் குருக்கள்) சிவாச்சாரியர்களினாலேயே பரம்பரை பரம்பரையாகச் செய்யப்பட்டுவருகின்றன. மகோற்சவ ஆரம்பத்தில் நடைபெறும் கொடியேற்று வைபவமும், முடிவில் செய்யப்படும் கொடியிறக்கும் வைபவமும் மிக விசேடமாகக் குறிப்பிடத்தக்கவையாகும்.

சிராமசாந்தி, வாஸ்துசாந்தி இரண்டும் ஆலய நிர்வாகத்தினாலும், ஏனைய திதவிழாக்கள் ஊர்ப் பொதுமக்களாலும் செய்யப்பட்டுவருகின்றன. குறிப்பிட்ட உபயகாரர்கள் தொடர்ந்தும் செய்துவருகின்றனர்.

## மகோற்சவ விளக்கம் :

### ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவம் :

உலகங்கள் யாவற்றிற்கும் முதற்காரணமாகியதும், பிரணவ ரூபமானதும், சிவசக்தியின் அருள் முகூர்த்தமுமான விநாயகப் பெருமானுக்கு ஏற்படும் விக்கினங்களை நீக்குவதற்காகவும், உற்சவங்கள் இனிது நிறைவு பெறுவதற்காகவும் முதலில் வழிபாடு செய்யப்படும். பின் அனுக்ஞை என்னும் கிரியை நடத்தப்படும். இது விநாயகப்பெருமானிடமும, பூசை செய்யும் அந்தணப் பெரியார்களிடமுல் உற்சவம் நடத்த அனுமதி வேண்டுவதாகும்.

1. கிராமசாந்தி :

ஆலயம் அமைந்துள்ள கிராமத்தில் வாழக்கூடிய அசுரர், இராக்கதர், பூதர், பைசாசர்களால் நடைபெற இருக்கும் பெருவிழாவிற்கு ஊறுபாடுகள் நேராவண்ணம் பலிகொடுத்தல், காவல்தெய்வமான வயிரவப்பெருமானுக்கும் பூசை செய்து பலி, ஓமம் முதலியன கொடுத்து இடத்தைக் காவல் படுத்துவது ஆகும். இதற்காக ஆலயத்தின் மேற்குப்புறத்தில் ஓர் மண்டபம் நிறுவப்படும். அங்கு சேத்திரபாலர் தலைமையில் ஒவ்வொரு தேவதையையும் அழைத்து அவரவர்க்குரிய வழிபாடுகள் செய்து அவ்விடங்களிலிருந்து விலகிச்செல்லுமாறு வேண்டுதல்.

2. வாஸ்துசாந்தி :

பூமியைச் சுத்தஞ்செய்வதற்காக நடைபெறுவது நான்கு முழ அளவாக வாஸ்துபுருஷனின் உருவம் ஒன்று செய்து ஆவாகனம் பண்ணித் தலையில் ஓமாக்கினி எரியவைத்துப் பரிசாரகர் அப்புருஷனின் உருவத்தைக் காலில் பற்றி வீதிகளில் இழுத்து வருவார். அவர் தமது கையில் பலிப்பொருட்களையும் கொண்டு செல்வார். கடைசியாக இவற்றை ஈசான திக்கில் குளத்தில் போடுவார். இவரைப் பின்தொடர்ந்து கும்ப நீர் தெளிக்கப்படும். அடுத்து மிருத் சங்கிரணம் எனப்படும் மண் எடுத்தல் நடைபெறும்.

உரிய இடத்தில் பூமி தேவியை வழிபாடு செய்து மண் எடுக்கப்படும். இப்படி எடுக்கப்பட்ட மண்ணைப் பரிசாரகர் தலையிற் சுமந்து யாகசாலைக்குக் கொண்டு சேர்ப்பார். படைத்தலுக்கு முக்கிய பொருள் மண். ஆனதால் எடுக்கப்பட்ட மண்ணிலே படைத்தலைக் குறிப்பதற்காக முளைப்பாலிகை யிடப்படும். இது அங்குரார்ப்பணம் எனப்படும். இதுவரை கூறப்பட்ட கிரியைகள் யாவும் கொடியேற்றத்தின் முதல்நாள் நடைபெறும் பூர்வாங்கக் கிரியைகள் ஆகும்.

## கொடிச்சீலை கொண்டுவருதல் :

கொடிச்சீலை கொடியேற்றத்தின் முதல்நாள் பிற்பகலில் ஆலய வண்ணக்குமார்களும், பெரியோர்களும் வாத்திய கோசங்களுடன் கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவிலிலிருந்து மிகவும் கோலாகலத்துடன் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்துக்குப் பிரதான வீதிவழியே எடுத்துச்செல்லப்படும். முன்

னால் காவடி ஆட்டங்களும் இடம்பெறும். ஆலயத்தை அடைந்ததும் வலம்வந்து பூசை நடைபெற்று வரவேற்கப்படும். அடுத்த நாள் துவஜாரோகணம் நடைபெறும்.

## கொடியேற்றம் :

காலை எம்பெருமானுக்கு விசேட அபிசேக பூசைகள் செய்யப்பட்டு இரட்சபந்தனம் (காப்புக்கட்டல்) நடைபெறும். அதையடுத்து தம்பம் பிரதிட்டை, கொடிப்பட பிரதிட்சை, பேரீதாடனம், வசந்தமண்டப பூசை என்பன நடைபெறும். முடிவில் சுவாமியைத் தம்பமண்டபத்தில் எழுந்தருளப்பண்ணிச் சமஸ்த தேவதா வசுகளம் என்னும் கிரியைகள், மகா ஆசீர்வாதம், ஆசீர்வாதம் என்னும் கிரியைகள் நடைபெற்று மங்களவாத்தியங்கள் முழங்கக் கொடிக்கம்பத்தில் கொடிச்சீலை ஏற்றப்படும். கொடியேற்றம் நடைபெற்றபின் கோயில் வாசலில் பிரம்மாவையும் வீதியின் எட்டுத்திக்குகளிலும் திசாநாதர்களையும் பூசித்து அவர்களுக்குச் சங்கீத உபசாரங்கள் செய்யப்படும். அன்றிரவு யாகசாலை முறைப்படி ஸ்தாபிக்கப்பட்டு, கும்பங்கள் வைத்து யாகந் தொடங்கி அக்கினிகாரியங்கள் நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் பகலிலும் இரவிலும் பூசைகள் நடைபெறும். ஆரம்பத்தில் அஸ்திரதேவரை எழுந்தருளச்செய்து எட்டுத்திக்குகளிலும் பலி கொடுக்கப்படும். பின் வசந்த மண்டபத்தில் விசேட பூசைகள், தீபாராதனை நடைபெறும். தீப ஆராதனைகளின்போது ஒற்றைத்தீபம், அடுக்குத்தீபம், கும்பதீபம், நட்சத்திரதீபம், பஞ்சமுகதீபம், நாகதீபம், இரிஷிபதீபம், புருஷாமிருக தீபம், ஈசானாதிதீபம், கற்பூரதீபம் என்பன காட்டப்படும். பின் வேதபாராயணம், தேவாரபாராயணம் என்பன நடையெற்றுச் சுவாமி வீதிவலம் வருவார். ஒவ்வொருநாளும் பகலில் உள் வீதியுலா யாகதர்சனம் நிகழும். இரவிலேயே வெளி வீதியுலா நடைபெறும்.

## கொடிமரம் சிவன் ஆன்மா :

மகோற்சவ ஆரம்ப நாளிலேயே ஆலயக் கொடிமரத்திலே கொடிச்சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். அச்சீலையிலே இடமாகிய பசு கீறப்பட்டிருக்கும். கொடிமரம் சிவம் என்றும், இடம் எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும், தர்ப்பைக்கயிறு பாசம் என்றும் சிவாகமம் கூறுகின்றது. இறைவனாகிய சிவத்திலே ஆன்மா தங்கியிருப்பதைப்போல கொடிமரத்திலே கொடிச்சீலை தங்கியிருக்கிறது. கொடிமரமும் சீலையும் இரு வேறு பொருட்களாயி

னும் அவற்றைப் பார்ப்பவர்கள் கொடிமரமாகிய ஒரே பொருளாக நினைக்கின்றனர். சிவமும் ஆன்மாவும் அத்துவித சம்பந்தமுடையது என்பதை இது விளக்குகின்றது.

கயிறு சீலையைச் சுற்றியிருப்பதுபோல பாசம் ஆன்மாவைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. கொடிமரம், சீலை, தர்ப்பைக்கயிறு ஆகிய முப்பொருட் சம்பந்தங்களையும் கொடிமரம் நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

## மகோற்சவம் 10 நாட்களும் விளக்கமும் :

முதலாம் நாள் தூல உடம்பை நீக்குதற்காகவும்,

இரண்டாம் நாள் தூல சூக்குமம் நீங்கும் பொருட்டும்,

மூன்றாம் நாள் மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மலம், முக்குற்ற, முப்பிறப்பு, முப்பற்று முதலியன நீங்குதல் பொருட்டும்,

நாலாம் நாள் நாற்கரணம், நால்வகைத் தோற்றமும் நீங்குதல்பொருட்டும்,

ஐந்தாம் நாள் ஐம்பொறிகள், ஐந்தவித்தை, ஐந்து மலங்களும் நீங்கும்பொருட்டும்,

ஆறாம் நாள் உட்பகை ஆறும், காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், பதமுத்தியாறும் நீங்குதற்கும்,

ஏழாம் நாள் எழுவகைப் பிறப்பு மலகுணமேழும் நீங்கவும்,

எட்டாம் நாள் எண்குணங்கள் விளங்குதல் பொருட்டும்,

ஒன்பதாம் நாள் மும்மலங்களைக் கெடுக்கவும்,

பத்தாம் நாள் சிவானந்தத்தைப் பெறவும் செயல்படுகின்றன.

ஒவ்வொருநாளும் சுவாமிக்குச் சாத்தப்படும் பட்டு உபயகாரரால் மேளதாளத்துடன் ஊர்வலமாக எடுத்துவரப்படும். அடியார்கள் பகலிலும் இரவிலும் சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வரும்போது காவடி ஆடியும், கற்பூரச்சட்டி எடுத்தும், அங்கப்பிரதட்சணம் செய்தும், பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டும் தங்கள் நேர்கடன்களை நிறைவுசெய்வர். இரவில் திருவிழா முடிந்தபின் கலை நிகழ்ச்சிகள், பக்திப் பாடல்கள், சமயச் சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும்.

இறுதிநாளாகிய தீர்த்தோற்சவத்திலன்று விசேட ஆராதனைகள் நடைபெற்று சூர்ணோத்சவம் முதலிய கிரிகைகள் செய்யப்

படும். முடிவில் சுவாமியும், அஸ்திரதேவர்களும் தீர்த்தமாடப் புறப்படுவர். சிவபெருமானும் உமாதேவியாரும், விநாயகப்பெருமானுடன் சேர்ந்து ரிஷப வாகனத்தில் எழுந்தருளிவந்து மாமாங்கக் குளத்தில் தீர்த்தமாடுவது வழக்கமாகும். மூவரும் சேர்ந்து காட்சிதருவது இலங்கையில் இத்தலத்தில் மட்டுமே. பாடல்களிலும் உமை சிவன் கணபதியும் சேர்ந்து தோன்றும் மாமாங்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று நண்பகல் பன்னிரெண்டு மணியளவில் தீர்த்தோற்சவம் கண்கொள்ளாக் காட்சியாக நடைநடைபெறும். பின் சுவாமிக்குத் தூப, தீப ஆராதனைகளும், அர்ச்சனைகளும் இடம்பெறும். இளைப்பாற்று மண்டபத்திலிருந்து அனுக்கிரகஞ் செய்வார். பிற்பகலில் அங்கிருந்து ஆலயத்துக்கு அடியார்கள் சூழ எழுந்தருளுவார்.

மேலும் மூலவருக்கு யாக கும்பங்களிலுள்ள நீரினால் அபிஷேகம் செய்யப்பட்டுப் பூசைகள் நடைபெறும். தொடர்ந்து திருப்பொன்னூஞ்சல் ஆடப்படும். பின் தம்ப மண்டபத்தில் கொடியிறக்க வைபவமும் சண்டேஸ்வரப் பெருமானுக்குத் திருவுலாவும் நடைபெறும். முடிவில் ஆசார்ய உற்சவம் நிறைவெய்தி வருடாந்த மகோற்சவம் முடிவுபெறும்.

மறுநாள் பூசைகள் திருவிழாக்களில் ஏற்பட்ட குற்றங்குறைகளை நீக்கும் வண்ணம் பிராயச்சித்த அபிசேகம் செய்யப்பட்டுப் பூசை நடைபெறும். பிற்பகலில் வயிரவப் பெருமானுக்கு வடைமாலை, ரொட்டி என்பன பிரசாதமாகவைத்துப் பூசை நடைபெறும். இவ்வாலயப் பூசைமுறைகளை வகுத்துவைத்தவர் இவ்வாலயப் பிரதம குருவாக இருந்து காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ இரத்தினசாமிக் குருக்களவர்களின் மூதாதையராவர்.

## ஆலயக் குருமார்:

கிழக்கிழங்கையில் விசேடம் பெற்ற ஆலயங்களில் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயமும் ஒன்று.

இவ்வாலயத்தில் தலைமுறை மாறாத பிராமணோத்தமர்களே பூசைகளையும், விழாக்களையும் நடத்திவருகின்றனர். இப்பெருமையையும் உடையது.

ஆலயக் குருவான வேதாகம மாமணி பூரணானந்தக் குருக்கள் அவர்களும் அவர் மைந்தன் பிரம்மஸ்ரீ பூரணசந்திரானக் குருக்கள் அவர்களும் இதய சுத்தியோடும் பயபக்தியோடும் வழிபாடுகளைச் செய்துவருகின்றனர்.

ஆலயச் சிறப்புக்கும் மதிப்புக்கும் காரணமாயுள்ளவர்கள்.

வரன்முறை தவறாது வேத ஆகமங்களையும் கோயிற் கிரிகை களையும் கற்றுத்தேர்ந்தவர்கள்.

அடியார்களோடு அன்பும் பண்புமாக நடந்துகொள்பவர்கள்.

ஆலய வளர்ச்சிகளில் பங்குகொண்டு உழைப்பவர்.

இவர்களைக்கொண்டு இவ்வாலயம் வழிநடத்தப்படுகின்றது.

## ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாராலயத்தில் நடைபெறும் விசேட பூசை:

1. சித்திரை வருடப்பிறப்பு, ஆலய நிதியிலிருந்து கைவிசேடம் கொடுத்தல் ஒவ்வொரு வருடமும் சிறப்பாக இடம்பெறுகிறது.
2. சித்திராப் பூரணை, சித்திரைக்குச் சித்திரை சித்திரபுத்திரக் கதை என்பன படிக்கப்படும் (ஆலய நிதி).
3. இவ்வாலய ஆண்டு மகோற்சவம், ஆடி அமாவாசை.
4. ஆவணிச் சதுர்த்தி.
5. புரட்டாதிச்சனி, நவக்கிரகங்களுக்குப் பூசையும் சனீஸ்பரருக்கு எள் எண்ணெய் எரித்தலும். (விசேடமாக) 93 ஆம் ஆண்டி லிருந்து விசேடமாக நடைபெறுகிறது.
6. கந்தசஷ்டி 6 நாட்களும் விசேட பூசைகள், 600க்கு மேற்பட் டோர் விரதமனுஷ்டிக்கின்றனர்.
7. நவராத்திரி 10 நாட்களும் விசேட பூசைகள்.
8. கார்த்திகைத்தீபம், கேதார கௌரிவிரதம் 21 நாள் (94ம் ஆண்டு).
9. பிள்ளையார் காப்பு விரதம் 21 நாள் பெருங்கதை (சயமுகா சூரன்போர் நடைபெறும்).
10. திருவெம்பா 10 நாட்களும் நடேசர் அபிசேகம் தீர்த்தமும்.
11. தைப்பூசம் விசேட நவக்கிரக அபிசேகம்.
12. மாசிமகம், 12 வருடங்களுக்கொருமுறை மகாமகம்.
13. மகா சிவராத்திரி விழா.
14. பங்குனி உத்தரவிழா.
15. ஆனி உத்தரம்.

ஒவ்வொரு மாதச் சதுர்த்திப் பூசைகள் பூரணைப் பூசைகள்.

கிழக்கிலங்கையில் மிகமிகப் பழமையானதும் (கிரேதயுகம்) வரலாற்று முக்கியம் வாய்ந்ததும், மூர்த்தி தலம் தீர்த்தம் என்பன மூன்றும் ஒழுங்கமைந்ததுமான ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாரின்

மகிமைகளையும், சிறப்புகளையும், கீர்த்தியினையும் பலரும் அறியும் வகையில் அறிஞர்கள் பெரியோர்கள் யாரும் வெளிக்கொணர முயற்சிகளை மேற்கொண்டாரில்லை. பேச்சுவழக்கிலும் சில குறிப்புக்களில் உள்ளபடியும் இவ்வரலாற்றுத் தொகுப்பு இடம்பெறுகிறது, வேறு சில வரலாறுகளும் இருக்கலாம். அவைகளைத்தந்து உதவினால் அடுத்த பதிப்புகளில் சேர்த்துக்கொள்ளலாம் என்பது எமது பணிவான வேண்டுகோள்.

## தல வரலாறும் பெருமையும் என்ற தலைப்பில் வெளிவந்தவை :

இலங்கையைப் பல திக்கிலுமிருந்து ஆண்ட அரசர்கள் ஆடக சவுந்தரியை இலங்கை முழுவதற்கும் ஏக சக்கராதிபதியாக்கினர். ஆடக சவுந்தரியின் பிதாவாகிய அசோகசுந்தரன் அசோககிரியை அரசுசெய்து பரமபதம் அடையும் காலம் வரத்தனது புத்திரி இலங்கையை அரசுபுரிவதை அறிந்து ஆடக சவுந்தரிக்கு வேண்டிய திரவியங்களையனுப்பிவிட்டுப் பரமபதம் அடைந்தான். ஆடக சவுந்தரியும் தந்தையனுப்பிய திரவியங்களைப்பெற்று ஆளும் காலம் ஓரிரவு சயனிக்கும் பொழுது இராமமூர்த்திதெரிசனப் பிரசன்னராகி ஆடக சவுந்தரியே நீதிரேதயுகமுடிவில் இலங்கையை அரசுபுரிந்த இராவணேஸ்வரனுக்குப் புத்திரியாகப்பிறக்க இராவணேஸ்வரன் சோதிடரை அழைத்து உனது பிறவி நோக்கைப் பார்வையிட்டான். சோதிடர் இந்தப்பிள்ளை இராச்சியத்துக்கு ஆகாது என உனது பிதாவாகிய இராவணேஸ்வரன் உன்னைப் பேழையிலடைத்து ஆழியில் விட்டான். அந்தப்பேளை வடகடல் மருங்காய்ச் சனகருடைய யாகஞ்செய்யுமிடமாகிய கடலருகிலடைந்தது. சனங்கள் எடுத்து சனகரிடம் கொடுத்தனர். அவர் வளர்த்துப் பருவகாலத்தில் அயோத்தியைப் பரிபாலிக்கும் தசரதன் மகன் ஸ்ரீ இராமனுக்குப் பாணிக்கிரகணம் செய்துவைத்தான். பின் தந்தையின் கட்டளைப்படி பதினான்கு ஆண்டுகள் வனத்தரசனாகித் தம்பி இலெட்சுமணனுடம் உன்னையும் கூட்டிக்கொண்டு போயிருந்தான். அக்கால இராவணேஸ்வரன் தங்கையாகிய சூர்ப்பனகி திருச்சிராவில் வாசஞ் செய்துகொண்டிருந்தாள். இராமர் கங்கை நதியில் தீர்த்தமாடவர வரும்போது அவரைக்கண்டு மோகங்கொள்ள இலட்சுமணன் காதுகளையும் மூக்கையும் அரிந்துவிட்டான். சூர்ப்பனகி இரத்தம் தோய்ந்த முகத்துடன் இராவணேஸ்வரனிடம் சென்று முறையிட்டாள். அவன் உன்னை மாயமாக கவர்ந்து கொண்டு சென்று இலங்கையில் சிறைவைத்தான். ஸ்ரீ இராமர் அவனைக்கொன்று அவன் தம்பியாகிய விபூஷணனுக்குப் பட்டம் கட்டி அயோத்திக்குச் செல்லவேண்டியிருந்ததால் இடையில் ஓர்

இடத்தில் அனுமனை ஏவி காசியிலுள்ள கங்கையில் அவிமுத்தித் தீர்த்தமெடுத்து ஒரு வாவியிற் கலந்து இருவரும் ஸ்நானஞ்செய்து பாவத்தை நீக்கி அயோத்திக்குப்போய் வாழ்ந்தனர். வாழுங்காலம் குசன் பிறந்து வால்மீகரால் உபதேசம் அளிப்பித்துப் பரமபதம் அடைந்தாய். அதேபோல இச்செனனமும் எடுத்தாய். இப்போது காசி அபிமுத்தி நீர் கலந்த நதி உன்னுடைய ஆச்சிரமத்திலிருக்கிறது. அந்நதியை அறியவேண்டில் அதில் பசுஞ் சந்தணச்சேறு நிறைந்திருக்கும். குஷ்டரோகிகள் ஸ்னானஞ்செய்தால் உடனே நோய் நீங்கிவிடும் என்று சொல்லி மறைந்தார். அரசியும் விழித்தெழுந்து அந்நதியை ஆராய்ந்து கண்டறிந்து பார்க்கும்போது காசி அபிமுத்தித் தீர்த்தம் கலந்துள்ள நதி மாமாங்கக்குளமே என அறிந்து இங்குவந்து தீர்த்தமாடி மாமங்கை நதி என நாமஞ்சாற்றினாள். ஆண்டாண்டுதோறும் மாமாங்கக்குளத்தில் தீர்த்தமெடுத்துக் கொண்டு திருக்கோயில் சமுத்திரத்திலிட்டுக் கலந்து ஆடித்திங்கள் அமாவாசையன்று தீர்த்தமாடிக் கொண்டாடிவந்தாள்.

ஆடக சவுந்தரி நூற்றிப்பதினேழு வருடம் வரை உன்னரசு கிரியை ஆண்டுவந்தாள் என்றும் அக்காலம் மட்டக்களப்பும் அவளின் ஆட்சியின்கீழ் இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆடக சவுந்தரியின் மற்றொரு வரலாறு:

மூன்று முலைகளையுடையவரும் 117 ஆண்டுகள் கன்னிப் பருவம் எய்தாமல் இளம் பெண்ணாகவே இருந்தவளுமாகிய ஆடக சவுந்தரி (ஆடகம் – பொன், சவுந்தரி – அழகி) மட்டக்களப்பின் தென்கொடியிலுள்ள உன்னரசு கிரியிலிருந்து அதிபதியாக கிழக்கிலங்கையின் பல பகுதிகளையும் ஆண்டுவந்தாள். இங்குள்ள குளத்தின் மகிமைகளைக் கேள்வியுற்றான். தனது பரிவாரங்களுடன் இத்தலத்துக்குவந்தாள். ஆலயத்தை வலம் வந்து வணங்கினாள். இத்திருக்குளத்தில் பயபக்தியோடு மூழ்கி எழுந்தாள். தனது மூன்றாவது முலைத்தடம் நீங்கியதோடு இளமையும் கன்னித்தன்மையும் பேரழகும் பெற்றாள். அதனால் மாமங்கைக்குளம் என அவளால் பெயரிடப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

விஷ்ணு மதத்தில் அதிக பற்றுடையவளும் இராம மந்திர வலிமையுடையவளுமாகிய ஆடக சவுந்தரிக்கு ஒருநாள் கனவிடை இராமன் தோன்றி அக்குளம் பற்றிக் கூறியதாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுவது.

இராவணனைச் சங்காரஞ்செய்து மீண்டபின் தானும் சீதையும் அயோத்திக்குச் செல்லும் வழியில் அனுமனை ஏவிக் காசியிலிருந்து அவிமுத்தித் தீர்த்தமெடுத்து ஒரு வாவியில் கலந்து இருவரும் நீராடிப் பாவத்தைப்போக்கி அயோத்திக்குச்சென்று வாழும்

காலம் குசன் பிறந்து வால்மீகி முனிவரால் உபதேசம் பெற்றான் சீதையாகிய நீ பரமபதமடைந்தாய் அதேபோல இச்செனனமும் எடுத்தாய் இப்போது காசி அவிமுத்தித் தீர்த்தம் கலந்த குளம் உன்னுடைய ஆச்சிரமத்திலிருக்கிறது அந்நதியைக் கண்டறியவேண்டில் அதில் பசுஞ்சந்தணச்சேறும் சரவணமும் (தர்ப்பை) நிறைந்திருக்கும் தோய்வோரின் ஜென்மவினை அகலும் எனக்கூறி மறைந்தார். அரசியும் கண்விழித்தெழுந்து அந்நதியை ஆராய்ந்து பார்க்கும்போது அது மட்டக்களப்பிலுள்ள மாமாங்கக்குளமே அவிமுத்தித் தீர்த்தம் கலந்தது என அறிந்தாள். இங்குவந்து நீராடி மாமங்கை நதி என நாமஞ்சாற்றினாள் எனவும் ஆண்டாண்டு தோறும் தீர்த்தம் எடுத்துக்கொண்டுபோய் திருக்கோவில் சமுத்திரத்திலிட்டுக் கலந்து ஆடித்திங்கள் அமாவாசைத் தினத்தன்று தீர்த்தமாடித் தன் ஜென்மவினையினின்றும் நீங்கினாள் என்றும் கூறப்படுகிறது.

ஆடக சவுந்தரி வாழ்ந்த 2ஆம் 3ஆம் நூற்றாண்டு காலத்தில் மாமாங்கக்குளம் சீரும் சிறப்பும் பெரும் புகழுமுடையதாக இருந்தது. ஆடக சவுந்தரி என்று மட்டக்களப்பில் புகழப்படும் பேரழகியாகிய இளவரசி கிழக்கிலங்கையையாண்ட மும்முலை அரக்கி என்றும் வேறுபகுதிகளில் குறிப்பிடப்படுகிறாள். மற்றொரு வரலாற்றின்படி ஆடக சவுந்தரிக்குப் பிறக்கும் பொழுதே இயற்கையாகக் கழுத்தில் ஒரு மச்சம் (மறு) இருந்தது எனவும் பெண்ணாக இருந்தபோதும் ஆண்களுக்குரிய தன்மைகள் காணப்பட்டதாகவும் பெண்களுக்குரிய நாணம் அச்சம் முதலிய குணங்கள் காணப்படவில்லை எனவும் அறியமுடிகிறது. ஒரு சமயம் குளக்கோட்டு மகாராசா கிழக்கிலே வந்து ஆலயம் அமைக்கத்தொடங்கியுள்ளான் என்பதைக் கேள்வியுற்றாள். அவனை விரட்டத் தன் படைகளுடன் வந்து குளக்கரை வடபுறமாகக் கூடாரமடித்து இளைப்பாறினாள். தோழிகளுடன் சேர்ந்து குளத்தில் நீராடினாள். அவள் கழுத்திலிருந்த மச்சம் மாயமாக மறைந்தது. அவளிடமிருந்த ஆண்தன்மைகள் மாறிப் பெண்களுக்குரிய இயல்புகள் யாவும் தானாக வந்தடைந்தன. உடனே அவள் தோழியருடன் ஆலயத்தையடைந்து வணங்கி இவ்வதிசய நிகழ்வுகளை எண்ணி புளகாங்கிதமடைந்தாள். இக்கதைகளின் உண்மைகள் எவ்வளவு தூரம் இருந்தபோதும் இத்தலத்தினதும் மூர்த்தியினதும் தீர்த்தத்தினதும் மகிமையும் அக்காலத்திலிருந்தே போற்றி வரப்பட்டுள்ளது. இதை விளக்கும் பாடலொன்று,

மட்டுநகர் மாநிலத்தை அரசுசெய்த
மாதரசான் கழுத்தினிலே
இருந்த மச்சம் சட்டெனவே மாற்றிய
நற்றீத்தங் கண்டேன்
சங்கரனார் சுயம்பு லிங்கக்காட்சி கண்டேன்.

எனவும் போற்றிப் புகழப்படுகிறது.

## இவ்வாலயத்தில் நிகழ்ந்த அற்புதங்கள் :

(1) முன்பு ஒரு சமயம் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாருடைய பக்தன் ஒருவன் தன்னைப் பற்றியுள்ள கொடிய நோயை தீர்க்க வேண்டும் அல்லது செத்து மடியவேண்டும் என்ற நோக்குடன் இத்தலத்துக்குவந்து ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாரைப் பக்தியுடன் வணங்கினான். ஆலயத்தைப் பலமுறை வலம் வந்தான். முடிவில் சுவாமி வெளிவீதி உலாவர எழுந்தருளும்போது தீத்தக்குளப் பக்க மாக இருந்த உயர்ந்த தென்னைமரமொன்றின்மீது ஏறிச் சுவாமி அருகாமையில் வரும்போது கீழே குதித்தான். உணர்வற்ற நிலை யில் கீழே விழுந்துகிடந்தான். எல்லாரும் ஓடிச்சென்று தூக்கி எடுத்துக்கொண்டுபோய்க் கிடத்தினர், நீர் தெளித்தனர். சிறிது நேரத்தில் அவன் புத்துணர்வுடன் எழுந்தான். தன்னைப் பற்றி யிருந்த கொடிய நோய் மறைந்துவிட்டதாகவும் மேலே இருந்து கீழே குதித்ததினால் தனக்கு எவ்வித வலியோ நோவோ தெரிய வில்லை எனவும் தனது நோய் தீராவிடின் மரத்திலிருந்து கீழே விழுந்து இறக்கவேண்டும் என்ற நோக்குடன் தான் அவ்வாறு செய்ததாகவும் கூறினான்.

(2) பெண்ணொருத்தி தன் நோயின் கொடுமையைப் பொறுக்கமுடியாமல் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்துக்குவந்து வணங்கினாள். முடிவில் மூலஸ்தானப் பின்புறமாகச்சென்று தனது கழுத்தைக் கத்தியால் அறுத்துக்கொண்டாள். உணர்வற்ற நிலை யிற்கிடந்தவளை வெளியில் கொணர்ந்து பக்கலில் உள்ள நாக தம்பிரான் கோயிலுக்கு முன்பாகக் கிடத்திவைத்தனர். சிறிது நேரத்தின்பின் எவ்வித ஆபத்துக்களுமில்லாது எழுந்தாள். தனக்கு இதுவரை இருந்த நோய் தீர்ந்துவிட்டதாகக் கூறினான். பலரும் இச்செய்தியினைக் கூறிக்கொள்கின்றனர்.

(3) அமிர்தகழி - மட்டிக்களியைப் பிறப்பிடமாகக்கொண்ட பெரியதம்பி - சீனித்தம்பி என்ற பெரியார் தீராத கொடிய நோய் ஒன்றினால் பலகாலம் துன்பப்பட்டுக்கொண்டிருந்தார். தீராத மெய்வருத்தம் தாங்கொணாமல் தெருத்தெருவாய் தானலைந்து மெலிந்துபோனேன். நேராத தெய்வங்களொன்றுமில்லை. பாராத வைத்தியங்கள் மருந்துமில்லை. படுந்துயரம் தீர ஒரு வழியுமில்லை என மனந்தெளிந்து முடிவில் மாமாங்கப்பிள்ளையாரே தஞ்சமென நம்பியிருந்தார். ஒருநாள் அவர் அயர்ந்த நிலையில் வயோதிபர் ஒருவர் வந்தார். ஒருகையில் மான்தோலும் மறுகையில் எண் ணெய்க்குப்பியும் இருந்தது. எண்ணெய்க்குப்பியைக் கொடுத்துக் குடியடா என்று சொல்லி மறைந்தார். சற்று நேரத்தில் எழுந்து அங்கு பார்க்கும்போது பெரியவரைக் காணவில்லை. எண்ணெக்

குப்பி இருப்பதைக்கண்டார். அதைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சில பொழுது குடித்துமுடித்தார். நோயும் நீங்கியது. எண்ணெய்க் குப்பியுடன் வந்தவர் மாமாங்கரே என நினைத்து நேரே மாமாங்கப் பிள்ளையார் ஆலயஞ்சென்றார். தீர்த்தக்குளத்தில் மூழ்கிக் கோயிலைச் சுற்றிவந்து அழுது வணங்கினார், வீடுசென்றார். எல்லோருக்கும் கூறினார். அயலவரும் வியப்படைந்தனர். மட்டிக்களியிலுள்ளோரே இதுபற்றிக் கூறுகின்றனர்.

(4) மண்முனை முருகேசு என்பவர் இங்குவந்து ஆலய தரிசனஞ்செய்து தீர்த்தமாடித் தனது பித்தநோய் தீர்ந்து சுகம் பெற்றார் எனத் திராய்மடு நல்லதம்பிச் சுவாமியவர்கள் கூறியுள்ளார்.

(5) வித்துவான் சரவணமுத்தன் அவர்களின் வெளியீட்டிலுள்ளபடி: பல்லி என்னும் நகரத்திலுள்ள வணிககுலத்து கல்யாணனுக்கும் இந்துமதி என்பவளுக்கும் வல்லாளன் என்பவன் புத்திரனாகப் பிறந்தான். வல்லாளன் பாலவயதிலேயே விநாயகப் பெருமான்மேல் அளவுகடந்த பக்தி கொண்டிருந்தான். சிறு கூழாங் கற்களைப் பிள்ளையார் உருவமாகவைத்துத் தன் சினேகிதர்களுடன் சேர்ந்து பக்தியுடன் வழிபாடு செய்துவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இதனால் இவனின் சினேகிதர்களின் பெற்றோர்கள் தமது குழந்தைகளை இவன் பிள்ளையார் வணக்கத்திலே கெடுப்பதாகக் கல்யாணனிடம் முறையிட்டனர். சினமுற்ற தந்தை அவனைப் பலமுறை கண்டித்தும் தண்டித்தும் வந்தான். அதற்குச் சற்றேனும் செவிகொடாது பிள்ளையார் வணக்கத்திலேயே வல்லாளன் நாட்டம் காட்டிவந்தான். ஈற்றில் ஆத்திரங்கொண்ட கல்யாணன் வல்லாளனை மரத்திலே கட்டிவைத்து அடித்து கற்களை அப்பாலே வீசி எறிந்துவிட்டு நீ வழிபடும் உன் பிள்ளையார் வல்லவனாக இருந்தால் உன்னை விடுவிக்கட்டும் என்று சொல்லிப் போய்விட்டான். அவனை ஆட்கொள்வதற்காகப் பிள்ளையார் ஒரு குள்ளனாக மாறு வேடமிட்டுவந்து கட்டகற்றிவிட்டுப் போயினார். அதேவேளை கல்யாணன் தொழுநோயால் பீடிக்கப்பட்டான் என்று விநாயக மான்மியம் எடுத்தியம்புகின்றது. விநாயகரைப் பூசிப்பதாலேயே தனது எண்ணம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் புட்ப பத்திரங்களையிட்டு உனது பாதகமலங்களைப் பணிந்துவரும் காலத்தில் வெறுப்புக்கொண்ட அவனின் தந்தை பலமுறை தண்டித்துவந்தான். வல்லாளனோ எதனையும் பொருட்படுத்தாது பிள்ளையாராகிய உன்னையே நினைத்து உருகின்றான். தந்தையோ தனது சொற்கேளாத வல்லாளனுக்கு மகனெனப்பாராது பல இன்னல்களை விளைவித்துவந்தான். வல்லாளன் அவற்றையெல்லாம் தாங்கித்தரித்து தனது நிலையிற்றளம்பாது நின்று உன்னருளால் மோட்சத்தைப் பெற்றான். அவ

னுடைய தந்தையோ உடலெங்கும் புண்ணுற்று தொழுநோயால் பீடிக்கப்பட்டான். அதைக்கண்ட வல்லாளன் அமிர்த நதியிலமைந்துள்ள மாமாங்கத்துக்குப்போய் அங்கு எழுந்தருளியிருக்கும் வினாயகப் பெருமானை வணங்கி நீராடினால் அந்தவினை தீருமெனத் தந்தைக்கு வழிகாட்ட அவன் இப்பகுதிக்குவந்து ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையாரை வணங்கி மாமாங்கக்குளத்தில் நீராடித் தன்னைப் பீடித்துள்ள தொழுநோயினின்றும் நீங்கினான் என்றும் கூறப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கையையாண்ட மும்முலையரக்கி ஆகிய ஆடக சவுந்தரியின் அமக்கலமான மூன்றாவது முலைத்தடம் மறைந்ததும் பிறக்கும்பொழுதே இயற்கையாகக் கழுத்திலிருந்த மச்சம் (மறு) அழிந்ததும் அவளிடம் காணப்பட்ட ஆண் தன்மை நீங்கி இளமையும் அழகும் பெற்றதும் மாமாங்கக்குளத்தில் நீராடி ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையாரின் பேரருளினால் கிடைக்கப்பெற்றன.

நல்லூர்த் தேரடிக்குடையிற் சுவாமிகள் தியாகராசாச் சுவாமிகள், சரவணச் சுவாமிகள், ஜேர்மனி சுவாமி கௌரிபாலா கவியரசு பரமஹம்சதாசன் என்பவர்களும் மாமாங்கப் பதியிலுள்ள தீர்த்தச் சிலப்புகள் பற்றியும் மூர்த்தியின் பெருமைகளையும் அறிந்திருந்தனர்.

பரமகம்சதாசன் தனக்குண்டான சருமநோயை மாமாங்கக குளத்தில் சில நாள் இருந்து தீர்த்தமாடியே தீர்த்துள்ளார். இதனால் மாமாங்கப்பிள்ளையார் அந்தாதி ஒன்று பாடினார். அது இன்று நமக்குக்கிடைத்தன.

(6) ஆலயத்திலிருந்து ½ மைல்ம தூரத்திலுள்ள பெரியாரொருவர் சிறிதுகால வயிற்றுநோயால் துன்பப்பட்டார். வைத்தியர்களிடம் காட்டி மருந்து பல செய்தார். சுகம் வந்ததாக இல்லை. ஒருநாள் தன் மகனை அழைத்து வாசலில் நின்ற தென்னையில் இளநீர் ஒன்றைப் பிடுங்கிவரும்படி கூறினார். அதை ஆலயத்தில் கொடுத்து அபிசேகம் பண்ணித் தீர்த்தம் திருநீறு பெற்று வரும்படி கூறினார். மகன் செல்லும் வழியில் அவன் கூட்டாளிகள் விளையாடிக்கொண்டு நின்றனர். இளநீரை வைத்து அவர்களுடன் சேர்ந்து விளையாடினான். நேரம் போனது தெரியவில்லை. பின் இளநீரைத் தேடினான். கூட விளையாடி பிள்ளைகள் தண்ணீர்த் தாகமெடுத்ததால் குடித்துவிட்டனர். நேரம் சென்று மத்தியானமாகிவிட்டது. தந்தை அடிப்பாரெனப் பயந்து ஆலயத்துக்குச் சென்றான். ஐயர் பூசைமுடிந்து கதவைப்பூட்டிச் சென்றுவிட்டார். வெளிக்கதவால் உள்ளே சென்றான். செய்வதறியாது கிடந்த வெறும் கோம்பை ஒன்றைத் தேடி எடுத்தான். பக்கத்திலிருந்த

குளத்தில் சிறிது நீரை அள்ளி எடுத்தான். திருநீற்றுப் பெட்டியில் இருந்த விபூதியை இலையொன்றில் வைத்து மடித்தான். கட்டையை எடுத்துச் சந்தணம் கொஞ்சம் அரைத்து எடுத்தான். வீடு சென்று தந்தையிடம் கொடுத்தான். தந்தை தீர்த்தத்தைக் குடித்து விபூதி சந்தணமெல்லாம் உடம்பில் பூசினார். பிள்ளையாரை நினைந்து வழிபட்டார். சிறிது நாட்களில் நோய் நீங்கியது. ஆலயத்துக்குவந்து பிள்ளையாரை வணங்கிச்சென்றார். நாட்கள் பல சென்ற பின்னே இவற்றை வீட்டில் கூறினான் என்பதை இங்குள்ள சிலர் கூறிக்கொள்கிறார்கள்.

## ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலய நிர்வாகம்:

கோட்டமுனைப்பகுதி வேளாளர் பரம்பரையினரும் (1880 ஆம் ஆண்டு) அமிர்தகழிப்பகுதி ஏழூர்க் குருகுல வம்சத்தவர்களுமே ஆயல நிர்வாகத்துக்கு உரிமையுடையவர்கள். மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இருபகுதியாரிலிருந்தும் பிரதம வண்ணக்கர் ஒருவரும் உதவி வண்ணக்கர் ஒருவருமாக நால்வர் தெரிவுசெய்யப்படுவர். தெரிவுகள் போட்டி முறையிலும் போட்டியில்லாமலும் நடைபெறும். கணக்காய்வாளர்கள் இருபகுதியாரிலிருந்தும் வருடத்துக்கொருமுறை இருவர் தெரிவுசெய்யப்படுவர். இவ்விருவருமே ஆலய நிர்வாகங்களை நடத்திவருகின்றனர். இப்போது உள்ள நிர்வாகத்தினர் 1993 ஆம் ஆண்டு ஆடி முதலாந்திகதி நடந்த தெரிவின்படி வந்தவர்களாவர்.

அண்மைக்காலத்தில் இத்தலத்தின் பெருஞ்சிறப்பு நோக்கி முன்னால் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த திரு. இராஜன் செல்வநாயகம் அவர்கள் அரசாங்க உதவியுடன் பெரும் பணச்செலவில் தூர்ந்துபோய்க்கொண்டிருந்த தீர்த்தக்குளத்தை அகழ்ந்து சுத்தஞ்செய்து படிக்கட்டுகளும் கட்டி மின்சார விளக்குகளால் அலங்கரித்து அழகுபடுத்தி வீதிகளையும் அகலமாக்கித் திருத்தி அரும்பெருந் தொண்டாற்றியுள்ளார். அவரது தொண்டு போற்றற்குரியது.

தினமும் கூடும் அடியார் கூட்டங்களினால் இப்புண்ணிய சேஷத்திரம் நாளடைவில் படிப்படியாக வளர்ச்சியடைந்து பல ஊர்மக்களும் வந்து வழிபாடு செய்து பலன்பெறும் புண்ணிய ஆலயமாக விளங்குகின்றது.

ஆலயக் காணியிலமைந்த தண்ணீர்ப்பந்தல் மடமொன்றில் பல வருடங்களாக இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தனர். தற்போது (1-2-95) புதிய நிர்வாகத்தினர் கையேற்று சிதைவுற்றுக்

கிடந்த பல பகுதிகளையும் திருத்திப் புதுப்பித்து நிறைவு செய்துள்ளனர்.

94ஆம் ஆண்டு ஆடி அமாவாசையிலன்று ஆலய நிர்வாகத்தினர் 5000 உணவுப் பார்சல்களை அடியார்களுக்கு வழங்கினர். 95ஆம் ஆண்டு ஆடி அமாவசை மகோச்சவம் தொடங்கி முடியும் வரை அடியார்களுக்கு இரவு பகலாக அன்னதானம் செய்துள்ளனர். இதற்குரிய நிதி பொருள் உதவிகளை மட்/வர்த்தகர்களும் ஏனைய பிரமுகர்களும் கிராமப்புற மக்களும் மனமுவந்து கொடுத்து உதவினர்.

ஏழுர்க் குருகுலவம்ச மக்களால் ஆலயக் காணியில் ஒரு மடம் கட்டி நடத்தப்பட்டு வந்தது. விராக்காலங்களில் அன்னதானப் பணியை மேற்கொண்டுவந்தனர். சூறாவளியினால் அம் மடம் சேதமாக்கப்பட்டது. மீண்டும் அதைத் திருத்திப் புதுப்பிக்கின்றனர்.

வேறும் பல மடங்கள் முன்பிருந்ததாகக் கூறுகின்றனர். ஆரம்பத்தில் மட்டுவில்/கதிரவேற்பிள்ளை மடம், நொத்தாரிசு இராசையா மடம், செட்டிமடம் என்பன. இவைபல இன்று இருந்த இடந் தெரியாது அழிந்துவிட்டன. இராசையா நொத்தாரிசு மடமும் சிதைந்து அழிந்த நிலையில் உள்ளது.

இவ்வரலாற்றுத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளவை காலங் காலமாகப் பொதுமக்களால் பேசப்பட்டுவந்த செவிவழி மரபுக் கதைகளாகவும் சில உண்மைகளை வைத்து எழுதப்பட்டவைகளாவும் உள்ளது.

இவ்வாலயத்துக்குவரலாற்றுக் குறிப்புகளோ பட்டயங்களோ கல்வெட்டுகளோ சாசனங்களோ கிடைக்கக்கூடியதாக இல்லை. பழமையானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாரின் புகழையும் சிறப்புக்களையும் வல்லமைகளையும் பெருமைகளையும் வெளிக்கொணர இதுவரை யாராலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இல்லை,

கிழக்கிலங்கையின் பல இடங்களிலுமிருந்து எண்ணிலடங்காதோர் ஒருமித்துக்கூடும் மிகப் பிரசித்திபெற்ற பேராலயமாக இருந்தும் இராசகோபுரம் ஒன்று சிறப்புற அமையவில்லை. ''கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்'' என்பதற்கமைய தற்போதைய நிர்வாகத்தினர் கோபுர ஆரம்பவேலைகளை மேற்கொண்டுள்ளனர். (என் செயலாவது யாதென்றுமில் உன்செயலே) என ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையாரின் அருள்வேண்டி நிற்கின்றோம்.

■

## உசாத்துணை நூல்கள்


1. மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்
– வித்துவான் F. X. C. நடராசா.

2. மட்டக்களப்புச் சைவக் கோயில்கள்
– வித்துவான் வீ. சி. கந்தையா.

3. ஸ்ரீ மாமாங்க விநாயகர் பதிகம்
– வித்துவான் அ. சரவணமுத்தன்.

4. கடவுளின் வடிவங்கள்
– சுவாமி சித்பவானந்தர்.

5. இலங்கைத் திருநாட்டின் இந்துக் கோயில்கள்
– இந்துக் கலாச்சார அமைச்சு.

6. மாமாங்கேஸ்வரர் காவடிச்சிந்து
– கவிஞர் செ. குணரெத்தினம்.

7. திருக்குடந்தைத் தல வரலாறு.

8. வருடாந்த மகோற்சவ விளக்கம்
– பிரம்மஸ்ரீ இரெத்தினசாமிக் குருக்கள்.

9. பன்னிருமாத நினைவுகள்
– ஆசிரியர் நா. முத்தையா.

10. வினைதீர்க்கும் விநாயகர்.

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.
Composed by S. Singarajah.